

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## புரட்டாசி – ஐப்பசி

மலர் 11 அக்டோபர் 2022 இதழ் 10

### பொருளடக்கம்




| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் | 17 |
| அன்பே உயிர் நாடி | 19 |
| புரட்டாசி மாத விசேஷ தினங்கள் | 24 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 25 |
| உதயம்பாக்கம் கும்பாபிஷேகம் | 26 |
| சகலாகலா வல்- மாலை | 28 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 31 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 34 |
| ஸங்கர கீதை | 36 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 41 |
| புராணக்கதை | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हृतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

**ஸ்ருதீனாம் மூர்தானோ தததி தவ யௌ சேகரதயா**

**மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தேஹி சரணௌ**

**யயோ; பாத்யம் பாத; பசுபதி ஜடாஜூடதடினீ**

**யயோ: லாக்ஷாலக்ஷ்மீ:ஆருணஹரிசூடாமணிருசி:**

தேவி எந்த உன் திருவடியை அலம்பப் பயன்படுத்திய நீர் சிவனின் சடைமுடியைக் கரைகளாக்கிய கங்கை நதியாகியதோ, எந்த திருவடியின் செம்பஞ்சுக் குழம்பு ஹரியின் சிவந்த சூடாமணியின் ஒளியாயிற்றோ வேதங்களின் தலைப்பகுதியான உபநிஷத்துக்கள் தலையணியாக தாங்குகின்றனவோ அந்த திருவடிகளை என் சென்னியிலும் தயையுடன் வைத்து அருள்வாயாக.

(ஸௌந்தர்ய லஹரீ 84)

எண்ணிய முடிதல் வேண்டும்
　　நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
　　தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
　　பரிதிமுன் பனி போல்
நண்ணிய நின் முன் இங்கு
　　நசித்திடல் வேண்டும் அன்னாய்.
மோஹத்தைக் கொன்று விடு அல்லாலென்றன்
　　மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு அல்லாலதில்
　　சிந்தனை மாய்த்துவிடு.
யோகத்திருதுவிடு-அல்லாலென்றன்
　　ஊனைச் சிதைத்துவிடு.
ஏகத்திருத்துலகம் இங்குள்ள
　　யாவையும் செய்பவளே.

பந்தத்தை நீக்கி விடு அல்லாலுயிர்ப்

பாரத்தைப் போக்கி விடு

சிந்தை தெளிவாக்கு அல்லாலிதைச்

செத்த உடலாக்கு.

இந்தப் பதர்களையே - நெல்லாமென

எண்ணி இருப்பேனோ

எந்தப் பொருளிலுமே உள்ளே நின்று

இயங்கி இருப்பவளே.

உள்ளம் உருகாதோ-அம்மா பக்திக்

கண்ணீர் பெருகாதோ

ஊள்ளம் குளிராதோ-பொய்யாணவ

ஊனம் ஒழியாதோ

வெள்ளக் கருணையிலே-இந்நாய் சிறு

வேட்கை தவிராதோ

விள்ளற்கரியவளே- அனைத்திலும்

மேவியிருப்பவளே.

(மகா சக்தி விண்ணப்பம் மகாகவி பரதியார்)

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்

வாக்கும் பேருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலும்

தேக்கும் செழுந்தமிழ்ச்செல்வமும் தொண்டர் செந்நாவினின்று

காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே.

கலைமகளே! வடமொழி நூல்களாகிய கடலும் நிறைந்த செழுமையான தமிழ்ச்செல்வமும் உடைய தொண்டரின் செம்மையான நாவினின்று காக்கும் அருட் கடலே பல கலைகளுக்கும் இறைவியே! ஆராயும் நூல் தோய்ந்த அறிவும் சொல்லின் சுவை பொருந்தப் பெற்ற கவி இயற்றும் ஆற்றலும் என்னிடம் பெருகும்படியாகச் செய்தருள்வாய்.

(குமர குருபரரின் சகலகலாவல்லி மாலை)

# ஆசிரியர் பக்கம்

தற்போது மிக அதிகமாக காதில் விழுவது ‘ஸனாதன தர்மம்’ பற்றிதான். நமது ஆளுநர் ஸனாதன தர்மமே நம்மைக் காக்கும் என்று சொன்னாலும் கோபம் வந்தது சிலருக்கு. இதை எதிர்ப்போம் என்று கூற ஆரம்பித்து விட்டனர். அவர்கள் எதிர்ப்பது அதன் ஒரம்சத்தையே. மற்ற அம்சங்கள் என்னவென்று தெரியாமலேயே பேசவும் எழுதவும் செய்கிறார்கள். பல பேருக்கு அதன் மூலம், வீச்சு, ஆழம் இவைகளைப் பற்றித் தெரியாது. இவை பற்றி எமக்குத் தெரிந்த வரையில் விளக்க முற்படுகிறோம். இது ஒரு நுனிப்புல் கட்டுரைதான்.

உலகில் உள்ள மதங்கள் ஒரு புருஷரால் ஏற்படுத்தப்பட்டவை. அவருக்குத் தரும் கௌரவமாக அவைகளில் மக்கள் விஸ்வாசமாக உள்ளார்கள். இவைகளில் வரும் நீதி போதனை இடங்கள் ப்ரசித்திப் பெற்றவை. சான்றாக Old statement இல் வரும் பத்துக் கட்டளைகளும் new testament இல் வரும் ‘மலைப் ப்ரசங்கம்’ ப்ரசித்திப் பெற்றவை. உண்மையில் இவை மட்டுமே மதமாகுமா! அவைகளைத் தோற்றுவித்த புருஷரில்லையேல் அந்த மதங்கள் இல்லை. இதற்கு மாறாக யாராலும் தோற்றுவிக்கப்படாத மதம் நம் ஸனாதன தர்மம். ஸனாதனம் என்றால் என்றும் இருப்பது என்று பொருள். தர்மம் என்றால் அறவாழ்க்கை என்று பொருள். தொன்று தொட்டு ரிஷிகளால் ஒழுகப்பட்டு வந்தது இந்த அற வாழ்க்கை. இது பன்முகம் கொண்டது. மனத்தளவில் மனிதனின் பண்புகளை வைத்து பல விஷயங்களை விளக்குகிறது. வெறும் நீதி போதனைகளை மட்டும் காட்டாமல் நடை முறைத் தத்வங்களையும் ஆத்ம தர்சனத்தையும் நுட்பமாக காட்டும். இதில் உள்ள நூல்கள் பல ஆண்டுகள் தள்ளி தள்ளி இயற்றப்பட்டிருந்தாலும் மேலே சொன்ன உண்மைகள் இவைகளில் இழை ஓடிக் கொண்டிருக்கும்.

மனிதன் என்பவன் யார்? அவனுடைய உண்மை ஸ்வரூபம் என்ன? அவனுடைய லக்ஷ்யம் என்ன? அவன் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும்? இப்படி பல நுட்பமான ஆராய்ச்சிகள் அடங்கியது இந்த தர்மம் என்றால் மிகையாகாது. இதில் வேடிக்கை இதை எதிர்த்த ஞானிகள் பலர் தங்கள் கொள்கையுடன் வேத தர்மத்தையும் சேர்த்துக் கொண்டதுதான். அவர்களுக்குப் பிடிக்காத அம்சத்தைத் தள்ளி மீதி உள்ள வேத தர்மத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

சனாதன தர்மம் மனிதனின் வாழ்க்கையை வ்யவஹாரிகம், பரமாத்திகம் என்று இரு வகையாகப் பிரிக்கும். வ்யவஹாரிக நிலையில் நாம் பார்க்கும் பல வகையான பேதங்களை ஒழுங்கு நடைமுறைக்காக ஸனாதனம் ஒத்துக் கொள்ளும். ஆனால் அது நிலையானது அல்ல. பரமார்த்திக நிலையில் எல்லோரும் சமம் என்னும் ஆன்மீக நிலையே நிரந்தரமானது. அதுவே மோக்ஷம். அதை நோக்கியே மனிதன் செயல் புரிய வேண்டும். தர்மார்த்த காமம் இம்மூன்றும் மோக்ஷ நிலையை உணர்த்த வேண்டும். மக்களின் புத்தி சக்தி பலதரப்பட்டது. எல்லோருக்கும் ஒரே உண்மையை நேராகச் சொல்ல முடியாது. எனவே வ்யவஹாரிக நடையிலேயே கர்ம, பக்தி, ஞான மார்க்கங்களைக் காட்டுகிறது ஸனாதன தர்மம். மக்களின் மனம் பல தரப்பட்டது. அதன் இயற்கைக்கு எற்றவாறு தர்மம் இருக்க வேண்டும். எல்லா மக்களையும் தழுவிய மதம் இது ஒன்று தான். எதைப்பற்றியும் கேள்விகள் கேட்கலாம். இப்போது கேட்கப்படும் கேள்விகள் அனைத்தும் புராண இதிகாஸங்களில் கேட்கப்பட்டனவை தான். அதற்குரிய பதில்களையும் தந்திருக்கிறது இந்த மதம். இதன் முக்ய கோட்பாடுகள் என்னென்ன என்று அடுத்த இதழில் பார்ப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் NO முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# திருப்பெயர்களின் பொருள்



'கோவிந்தன்' என்றால் 'இந்த்ரியங்களை அடக்கி ஆளுகிறவன்' என்றும் அர்த்தம் சொல்வார்கள். இந்த இடத்தில் 'கோ' என்றால் இந்த்ரியங்கள். பார்ப்பார் அகத்துப் பாற் பசு ஐந்து' என்று திருமூலர் சொன்ன இந்த்ரியப் பசுதான் 'கோ', 'கேசவன்' என்பதற்கும் இப்படியே தத்வார்த்தமாக 'க+அ+ஈச +வ' என்பதே கேசவன் என்று வ்யாக்யானம் செய்வார்கள். க என்றால் ப்ரம்மா. வேதத்திலேயே அப்படிப் பெயர் சொல்லியிருக்கிறது. அ என்பது விஷ்ணு. 'அகர முதல எழுத்தெல்லாம்' என்றபடி விச்வத்தின் ரூபமாக இருக்கிற விஷ்ணுதான் அ ! அ, உ, ம என்ற மூன்றும் சேர்ந்த ப்ரணவமான 'ஓம்' என்பதில்கூட அ என்பது விஷ்ணு, உ என்பது ஈச்வரன், ம என்பது ப்ரம்மா என்ற த்ரிமூர்த்தி ஸ்வரூபமாகத்தான் சொல்லியிருக்கிறது. அப்படியே 'கேசவ' நாமாவிலும் க என்பது ப்ரம்மா, அ என்பது விஷ்ணு, ஈச என்பது ஈச்வரன் (சிவன்) - இந்த மூவரையும் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிற பரமாத்மாதான் 'கேசவன்' என்று அர்த்தம் பண்ணுவதுண்டு.

மது மாதிரி - தேன் மாதிரி - மதுரமான ரூபத்தோடும் ஸ்வபாவத்தோடும் இருப்பவன் மாதவன். இதுவும் விசேஷமாக க்ருஷ்ணன் பேராகவே இருக்கிறது, ஆனால் மஹா விஷ்ணுவுக்கே இந்தப் பெயர் உண்டு. மது - கைடபர் என்ற இரண்டு அஸுரர்களை மஹாவிஷ்ணு ஸம்ஹாரம் பண்ணினார். மதுவைக் கொன்றதால் மாதவன் என்ற பெயர் வந்தது. இன்னொரு அர்த்தமும் உண்டு. 'மா' என்றால் லக்ஷ்மி. காமாக்ஷி என்று அம்பாளின் பெயர் இருக்கிறதே, அதில் நடுவே வருகிற 'மா'வுக்குக்கூட 'லக்ஷ்மி' என்று அர்த்தம் பண்ணுவதுண்டு. 'சிவ' பத்னி 'சிவா' என்பது போல, 'க' என்ற ப்ரம்மாவின் பத்னியான ஸரஸ்வதிக்குக் 'கா' என்று பெயர். 'கா'வான ஸரஸ்வதியும், மாவான லக்ஷ்மியும் எவளுக்கு இரண்டு அக்ஷங்களாக (கண்களாக) இருக்கிறார்களோ, அவளே

'காமாக்ஷி'! தீக்ஷிதர்கூட 'நீரஜாக்ஷி காமாக்ஷி' க்ருதியில் லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் காமாக்ஷிக்கு இரண்டு கண்களாக இருப்பதை 'சாரதா ரமா நயனே' என்கிறார். 'மா' என்றே தமிழிலும் லக்ஷ்மியைச் சொல்லியிருக்கிறது. 'தவன்' என்றால் புருஷன் (கணவன்). தவன், அதாவது புருஷன், இல்லாதவள் விதவா. லக்ஷ்மீ நாயகனாதலால் மஹா விஷ்ணுவுக்கு மா + தவன்; மாதவன் என்றும் ஒரு பேர்.

பன்னிரண்டு நாமாக்களில் இன்னொன்றான 'மதுஸூதன' என்பதும் மது என்ற அஸுரனைக் கொன்றதைத்தான் குறிப்பிடுகிறது. இது மஹாவிஷ்ணு பண்ணின கார்யமானாலும் க்ருஷ்ணன் பூர்ணாவதாரமானபடியால் பொதுவில் அவரையே மதுஸூதனன் என்று சொல்கிறோம்.

இப்படியே ஹ்ருஷீகேசன்' என்ற பெயரும். 'ஹ்ருஷீகம்' என்றால் இந்த்ரியங்கள். அவற்றை அடக்கி ஆளுகிற ஈசன் தான் ஹ்ருஷீகேசன். கீதையில் 'ஹ்ருஷீகேசன்'' என்ற பெயரையே அநேக இடங்களில் க்ருஷ்ணனுக்குக் கொடுத்திருக்கிறது.

பன்னிரண்டு நாமாக்களில் நாராயணன், விஷ்ணு, ஸ்ரீதரன், பத்மநாபன் என்ற நாலு பெயர்கள் நேராக மஹா விஷ்ணுவைக் குறிப்பதாக இருக்கின்றன. த்ரிவிக்ரம, வாமன என்ற இரண்டும் வாமன ப்ரம்மச்சாரியாகக் குட்டையாக வந்து அப்புறம் த்ரிவிக்ரமனாக வளர்ந்து உலகளந்த அவதாரத்தைச் சொல்கின்றன. கேசவன், மாதவன், கோவிந்தன், மதுஸூதனன், ஹ்ருஷீகேசன், தாமோதரன் என்ற பாக்கியுள்ள ஆறு பெயர்களும் லோக வழக்கில் நாமாக்களாகவே கருதப்படுகின்றன. ராமாவதாரம், நரஸிம்ஹாவதாரம் முதலிய மற்ற அவதாரங்களுக்கு ஏற்பட்ட தனிப் பெயர்கள் இந்தப் பன்னிரண்டில் இல்லை.

வேத ஸூக்தங்களில் மஹாவிஷ்ணு த்ரிவிக்ரமனாக வந்ததையே விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது. பிற்பாடு புராணங்களிலும், பஜனை, ஸங்கீர்த்தனம் முதலானவைகளிலும் க்ருஷ்ணனையே பூர்ணாவதாரம் என்று விசேஷித்திருக்கிறது. த்வாதச நாமாக்களிலும் இந்த இரண்டு அவதாரப் பெயர்களே இருக்கின்றன !

இந்தப் பன்னிரண்டு பெயர்களில் தாமோதர, கோவிந்த என்ற இரண்டை ஷட்பதீயின் ஆறாவது ச்லோகத்தில் ஆசார்யாள் ப்ரயோகித்திருக்கிறார். முதல் ச்லோகத்தில் அவிநயம் அபநய விஷ்ணோ ! என்று விஷ்ணுவை அழைத்து இந்த ஸ்தோத்ரத்தை விஷ்ணுபரமாகவே ஆரம்பித்தாலும், இங்கே பூர்ணாவதாரமான க்ருஷ்ணனின் இரண்டு பெயர்களாலே கூப்பிட்டு முடிக்கிறார். (தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## வழிபாட்டின் பெருமை


நாம் உண்ணும் உணவு, இருக்கும் இடம், உடுத்தும் உடை ஆகிய பொருட்கள் எல்லோமே கிராமத்திலிருந்து தாம் கிடைக்கின்றது.

அப்படி கிராமத்திலிருந்து கிடைக்கும் பொருட்களையே நாம் உபயோகிக்க ஆரம்பித்தால் கிராமத்து மக்களுக்கும், வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களுக்கும் கஷ்டம் வராது. அவர்களுக்கும் நம்முடைய கிராமத்து மக்கள் என்ற தேசப்பற்று வரும்.

அப்படிப்பட்ட உயரிய நோக்கத்துடன் தான் மகாத்மா காந்தி அவர்கள் சர்வோதய இயக்கத்தைத் தொடங்கினார்கள். அவருக்குப் பிறகு பலரும் தொடங்கினார்கள்.

தமிழ்நாட்டில் ராஜாஜி அவர்கள் சர்வோதய இயக்கத்தைத் துவங்கி, அது நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது.

எங்களது வேஸ்ட் பேப்பர்களை எல்லாம் அங்கே அனுப்புவோம். எங்களுக்கு வரும் தபால்களை எல்லாம் பாதுகாப்பு பண்ணுவதற்கு அவர்கள் தான் ஃபைல்கள் வழங்குகிறார்கள். இது



ரொம்பக் காலமாக நடந்து கொண்டு வருகிறது.

அதனால் தான் எல்லோரும் கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். காந்தியின் கனவுகளுக்காக மட்டும் அல்லாது, நம்முடைய கிராமங்கள் வளம்பெற வேண்டும் என்ற நிலையில் ஆதரிக்க வேண்டும்.

அடுத்தவர்களிடம் கைகட்டி நிற்காமல் நமக்கு நாமே சம்பாதித்து வாழலாம் என்பதற்கு உறுதுணையாக இருக்கும்

சர்வோதய இயக்கம் மேலும் விசேஷமாக விளங்க வேண்டும் என்று ஆசிர்வாதம் வழங்குகிறோம்.

# கல்கண்டும் இனிப்பும்

தூய்மைக்கு எடுத்துக்காட்டு வெண்மை. உலோகங்களில் வெண்மையானது வெள்ளி. வெள்ளிப் பாத்திரங்களைப் பார்த்தால் பளபளவென்று வெண்மையாக இருக்கும்.

தூய்மைக்கு எடுத்துக்காட்டு வெளுப்பு.

கோபதாபத்துக்கு எடுத்துக்காட்டு சிவப்பு. கோபம் வந்தால் கண்கள் எல்லாம் சிவந்து விடும். உடம்பும் சிவந்துவிடும். கைகால்கள் எல்லாம் படபடப்பு வந்துவிடும். இது ரஜோ குணத்துக்கு எடுத்துக்காட்டு.

தமோ குணத்துக்கு எடுத்துக்காட்டு கருப்பு. எதாவது துக்கம் நடைபெற்றால் கருப்புத் துணி அணிந்து கொள்வோம்.

சத்துவகுணத்துக்கு எடுத்துக்காட்டு வெளுப்பு. தூய்மையாக இருப்பதற்கு சத்துவகுணம். பெரியவர் சர்வ சத்துவக் குணத்தோடு வாழ்ந்தவர்.

கைலாயங்கிரியில் சிவபெருமான் வீற்றிருக்கிறார். மலையை 'வெள்ளியங்கிரி' என்பார்கள். அவ்வளவு வெளுப்பாக இருக்கும்.

இறைவன் இருப்பிடம்- தூய்மையானது- அது போல வெளுப்பான, சுத்தமான இடம் கைலாயம். அம்மையும் அப்பனுமாக கயிலையில் இருக்கிறார்கள்.

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் சந்திர மௌலீஸ்வரராகவும், திரிபுர சுந்தரியாகவும் வந்து அருள்பாலிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, விநாயகர் முதல் முருகன், கிருஷ்ணன் என்று பல வடிவங்களில் அருள்பாலிக்கிறார். வடிவ மாற்றத்தாலும், பெயர் மாற்றத்தாலும் கடவுள் வேறுவேறு அல்லர். ஒரே கடவுள்தான் எல்லோருக்குமே.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று திருமூலரும் சொல்லி இருக்கிறார். ஆண்டவன் ஒரே சக்தியாக இருந்து பல காரியங்களைப் பல ரூபங்களாக்கி நடத்துகிறான்.

நம்முடைய வாழ்க்கையிலேயே பார்க்கலாம். ஒரு கம்பெனியின் உரிமையாளராக இருப்போம். 'முதலாளி அய்யா' என்பார்கள். சட்டம் படித்திருந்தால் வக்கீலாகி கோர்ட்டுக்குப் போவோம். அங்கே 'வக்கீலய்யா'... என்பார்கள்.

இப்படி எந்தெந்த இடத்திற்குப் போகிறோமோ அந்தந்த இடத்திற்குத் தக்கபடி ஆடை அணிந்து அந்தந்த

இடத்திற்குத் தக்கபடி நடந்து கொள்கிறோம்.

ஆனால் எல்லா மனிதர்களும் ஒருவரேதான். ஒரே படைப்புதான். மனிதன் ஒருவன் தான். அவனுக்குள் பிரிவுகள்தான் பலப்பல. கண், காது, மூக்கு, வாய், கால் என்று ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு வேலை இருக்கிறது. இவை எல்லாமே உடலை மையமாக வைத்துச் செயல்படுகிறது. அதுபோல எல்லா ஜீவராசிகளுமே ஆண் டவனை முன் நிறுத்தித்தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.

ஒரே ஆண்டவன்தான். அவனை வணங்க உருவ வழிபாடுதான் சிறந்தது. அருவ வழிபாடும் செய்கிறார்கள். வெறும் வெட்டவெளியில் எதைக் கவனித்துக் கும்பிடுவது? சூன்யமான இடம். அந்த இடைவெளியில் யாரிடம் எப்படி முறையிட முடியும்? எப்படிப் பதிலையும் பெற முடியும்?

அருவமாக உள்ள பரம்பொருள்தான் வடிவமாக வந்து நமக்கு முன்னே உதவுகிறது. மின்சக்தி பல்பாகவும் விசிறியாகவும் உதவுகிறது. அருவத்தை நேராக வழிபடுவது என்பது முடியாத காரியம். அதற்காகவே உருவ வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

நூலிலிருந்து பலவிதமான வண்ணங்களில் பல விதமான டிசைன்களில் உடைகள் தயாரிக்கிறோம்.ஆனால் கட்டிக்கொள்ளும் போது அது ஆடையாகிறது. அந்த ஆடையில் இருப்பது எல்லாமே நூல். உடைகள் பலருக்கு உபயோகப்படுகிறது. ஆனால் நூல் ஒன்றே ஒன்றுதான்.

பட்சணத்திலே சொல்வார்கள். லட்டு - பூந்தியைப் பிடித்து வைத்தால் அது லட்டு. உதிர்ந்து விட்டால் அதுவே பூந்தி. சில பேர் பூந்தியை விரும்பிச் சாப்பிடுவார்கள். சிலபேர் லட்டு விரும்பிச் சாப்பிடுவார்கள். வடிவம் லட்டு; மனதுக்குப் பிடிப்பதனால் அப்படிச் சாப்பிடுகிறார்கள்.

அதுபோலவே, வடிவம், அவரவர்க்குப் பிடித்தமாக இருப்பதனால் அதற்கு அலங்காரம் செய்வதும்

பூஜை செய்து வணங்குவதும் மனத்துக்குப் பிடித்தமானதாக இருக்கிறது.

அருவத்தில் அது எப்படி மனதுக்குப் பிடிக்கும்? பெரியவர்கள் சித்தர்கள், ஞானிகள் போன்றவர்கள் மட்டும் மனத்துக்குள்ளே இறைவனை அனுபவிப்பார்கள். மற்றவர்களுக்கு உருவவழிபாடுதான் தேவை.

கல்கண்டு எப்படி இருந்தாலும் இனிப்பாக இருக்கிறது. இனிப்பை கல்கண்டை விட்டுத் தனியாக பிரிக்க முடியாது. இனிப்பே, கல்கண்டின் வடிவமாக கல்கண்டுக்குள்ளே மறைந்து இருக்கிறது.

உருவமான கல்கண்டை வாயில் போட்டால்தான் அதன் அருவமான இனிப்பு வெளியே தெரியும். அதுபோல உருவத்தை வழிபட்டால்தான் அருவத்தை உணர முடியும்.

அதுபோல உருவம் என்பது ஒரு சாதனம். அருவம் என்பது ஒரு அனுபவம். அந்த அருவத்தை உணர நமக்கெல்லாம் உருவ வழிபாடு மிகவும் அவசியமாக இருக்கிறது. காரியங்களுக்காகத்தான் பல வடிவங்கள் உண்டு இறைவனுக்கு.

ஒரு கம்பெனி என்றால் ஒரு சேர்மன், ஒரு எம்.டி. தான் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு எத்தனையோ பேர் உதவி செய்வார்கள். உழைப்பார்கள். அத்தனை பேரும் இருந்தால்தான் அவர் சேர்மனாகவும், எம்.டி.யாகவும் இருக்க முடியும். அத்தனை உழைப்பாளிகளுக்கும் யார் பொறுப்பு? அந்த எம்.டி. தான் பொறுப்பு.

அதுபோல இறைவன் ஒருவன்தான். அவனுக்கு மகிமை கூறவே இத்தனை வடிவங்களும் வந்திருக்கின்றன. இறைவனை அடைவதற்காகவே இத்தனை வடிவங்களும் இருக்கின்றன. இவை அத்தனைக்குள்ளும் இறைவன் இருந்து கொண்டு வழி நடத்துகிறான், இயங்கி வருகிறான்.

அத்தனை தொழிலாளிகளுக்கும் இது ‘நம்முடைய கம்பெனி’, இது ‘நம்முடைய முதலாளி ’ என்ற எண்ணம் இருக்கும்.

வீட்டிலே, ‘டயமாச்சு... நான் சீக்கிரமாக எங்க கம்பெனிக்குப் போகணும்’’ என்று சொல்லி அவசரப்படுத்துகிறோம். அங்கே போனதும் இவர் எங்க முதலாளி... என்று எம்.டி.யைப் பார்த்து நமக்குள்ளே சொல்லிக் கொள்கிறோம்.

சக பணியாளர்களிடம் ‘நம்ம கம்பெனி’ ‘நம்ம முதலாளி’ என்றும் பேசிக் கொள்கிறோம்.

‘நம்ம... நம்ம... நம்ம...’ என்ற இந்த உணர்வு இருந்தால்தான் நமக்கு ஈடுபாடு வரும். அக்கறை வரும். வேலை செய்யவும் மனம் வரும். ஆக, ‘நம்ம’ என்பது எல்லாவற்றிலும் உள்ளது. ஆண்டவன் என்பதும் எல்லாவற்றிலும் உள்ளது. ஆண்டவன் இல்லாமல் எதுவுமே கிடையாது.

பேங்கிற்குப் போகிறோம், வருகிறோம். அப்போது ‘நம்ம பேங்க், என்ற எண்ணம் வந்துவிடுகிறது. அது போல ஆண்டவனையும் ‘நம்ம ஆண்டவன்’ என்று உணர்ந்து கொள்வதற்கு உருவவழிபாட்டின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

கண்ணீர் மல்கி, பக்திப் பரவசத்தால் நெக்குருகிப் போய் நெஞ்சம் எல்லாம்

பூரிக்கும்படி ஆண்டவனை வணங்க உருவ வழிபாடுதான் தேவை. உருவத்தை இல்லாமல் வேறு எதைப் பார்த்து கண்ணீர் மல்குவது? அருவத்தை எங்கே போய்த் தேடிக் கண்ணீர் வடிப்பது?

எத்தனையோ ஊர்களில் எவ்வளவோ சிறப்பான சிவபுராணக் கதைகள் எல்லாம் இருக்கின்றன.

திருச்சிராப்பள்ளியில் உள்ள சிவனுக்கு 'தாயுமானவர்' என்று பெயர். அவர் தந்தையாக இருந்ததோடு மட்டுமல்லாமல் தாயுமாகவும் இருந்திருக்கிறார். தாயுமானவர் என்று அதனால்தான் அவருக்குப் பெயரும் வந்தது.

இந்த உலகம், மறுமை உலகம் இரண்டுக்கும் நம்மை நெறிப்படுத்தி உதவுவது 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை' என்றார் திருவள்ளுவர்.

பொருள், அருள் இரண்டுமே இந்த உலகத்திற்கு வேண்டும். பொருளை இப்போது தேடி, அதை அருளுக்காகச் செலவழித்தால் அடுத்த பிறவியில் நமக்குப் பொருளோடு அருள் வாழ்க்கையும் கிட்டும்.

இந்த லோகத்துக்கும் பொருளால் செய்யக்கூடிய அறம். அறத்தோடு கூடிய பொருளே நம் வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்கிறது.

'ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இந்த அருளும், பொருளும் கிட்டி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். அப்படி நினைப்பதுவே அல்லாது, வேறு ஒன்றும் அறியேன் பராபரமே' என்ற தாயுமானவர் பாடலைப் பாடியபடி எல்லோருக்கும் இறையருள் கிடைத்து மன அமைதி, ஆரோக்கியத்துடன் விளங்க வேண்டும் என்று வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...

# வாசகர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

**சாதுர் மாச பூர்த்தி சமயம்**

*ஸ்வாமி பரிபூர்ணானந்த அவர்களின் ஆஸ்ரமத்தில்*
*பெரியவா ஆற்றிய அருளுரை*



**ஓம் வசுதேவம் சுதம் தேவம் கம்ச சானூர மர்தனம்**
**தேவகி பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்**

वासुदेवसुतं देवं कंसचाणूरसर्दनम् ।
देवकी परमानन्दं कृष्णं वन्दे जगद्गुरुम् ।।

சாதுர்மாஸ்யம் மூன்று வருடங்களாக முயற்சி செய்து, சாகண்டி கோடேஸ்வர ராவ் முயற்சியால் காகிநாடாவில் அநேக ஹோமம், சத் சங்கம், சதஸ் எல்லாம் நடந்தது. இன்று மூன்று விதமான மழை. அம்பா தேவியின் மூலம் வருண பகவான் தந்த மழை. இரண்டாவது அனுபத ஸ்நானம். மூன்றாவது சாதுர் மாச விரதம் நிறைவேறி, கோசாலையில் புஷ்ப யாகம் செய்தது அங்கே ஒரு புஷ்ப மழை.

இன்று நீங்கள் காட்டும் ஜன மழை. மேகத்தில் இருந்து மழை வந்தாலும், நீங்கள் அனைவரும் வந்து சேர்ந்தது ஒரு விசேஷம். நீங்கள் அனைவரும் காலை முதல் பல இடங்களில் இருந்து வந்து, ஒரு தீக்ஷை போல் பக்தி, ஸ்ரத்தையுடன் காத்துக் கொண்டு இருக்கின்றீர்கள். இந்த சம்சார வாழ்க்கையில் நீங்கள் பொறுமையாக தர்மம், கலாசாரம், ஆசாரம் காப்பாற்றி காலை முதல் பல காரியங்கள் செய்து கொண்டு வருகிறீர்கள். தபஸ் வேண்டி அனைவரும் பிரயத்தனம் செய்து வருகிறீர்கள்.

நமது பாரம்பரியம், கலாசாரம் காப்பாற்ற வேண்டி, பல இடங்களில் இருந்து நீங்கள் வந்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் குங்கும பிரசாதம், சௌபாக்ய தாம்பூலம் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **தேவி சௌபாக்கியம் ஆரோக்கியம், தேஹி மே பரமம் சுகம் ரூபம் தேஹி, ஜெயம் தேஹி, யஷோ தேஹி, த்விஷோ தேஹி** -அனைவருக்கும் நல்லது நடக்க வேண்டும்.

நாம், இந்த தேசத்தில் தர்மம் அனைத்தையும் காப்பாற்ற வேண்டும். இது சுயநலத்திற்காக அல்ல. இதன் மூலம் நாம் தர்மத்தையும் காப்பாற்ற முடியும். பல யுகங்களாக - கிருத, த்ரேதா, த்வாபார, கலியுகம் - நாம் காப்பாற்றிக் கொண்டு வரும் இந்த சனாதன தர்மத்தை தொடர்ந்து காப்பாற்ற, நமது பக்தி, விஸ்வாசம், கோவில்கள் அனைத்தையும் காப்பாற்ற, நாம் நமது தர்மத்தை தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல வேலை தொழிற்சாலையில் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். இம்மக்கள் மத்தியில் நல்ல பக்தி பெருக வேண்டும் என்று பரிபூர்ணானந்த ஸ்வாமி முயன்று வருகிறார்.

இங்கே ஸ்வாமிகள் எங்கிருந்தோ வந்து, ஆஸ்ரமம் வைத்து, கோவில் கட்டி, ஸ்வாமி தயானந்தா அவர்களின் AIM for Seva மூலம் பணி செய்து வருகிறார். சுவாமி தயானந்த சுவாமிகள், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமி அவர்களுக்கு மிக நெருக்கமானவர். அவர் கோயம்பத்தூரில் ஆஸ்ரமம் கட்டி, அங்கங்கு பாடசாலை, பள்ளிக்கூடம் கட்டி, மலைவாழ் மக்களுக்கு கல்வி அளித்து, பக்தி புக்தி என்ற முறையில் போதித்து வருகிறார். திரு. R. வெங்கட்ராமன் அவர்களையும் இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தி, சேவா மூலம் தர்மத்தை பரப்பி, பிரசாரம் செய்து, நாம் நாமாகவே இருக்க வேண்டும் என்று கூறி, நாம் சமமாக இருக்க வேண்டும், எந்த வித்தியாசம் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற சிந்தனையுடன், அனைவரும் தர்மத்தை காப்பாற்ற, பரப்ப சேவை செய்கிறார்கள்.

அனைவரும் விஸ்வரூப சங்கர்ஷண யோகம் கேட்டு, பிரசாதம் பெற்றுக் கொள்ளவும். சாதுர்மாச சங்கல்பம் என்பது, காகிநாடாவில் நடந்தது. நீங்கள் அனைவரும் சனாதன தர்மத்தை காப்பாற்ற சங்கல்பம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதை - மனசா, வாசா, கர்மனா -என்பதற்கேற்ப காப்பாற்ற வேண்டும். பகவான் கருணையால் அனைவருக்கும் நல்லது நடக்க வேண்டும். நமக்கு ஒரு நல்ல சாரதி - பார்த்தசாரதி - நம்மை நல்வழியில் நடத்த, தர்ம வழியில் நடத்த தேவை. அனைவரும் நமது தர்மத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்துக் கொள்ள வேண்டும். சஞ்சலமற்ற, திடமான

நம்பிக்கை தேவை. இந்த சமுதாயத்திற்கு, இந்த நாட்டிற்கு, இந்த நாடு மட்டுமல்ல, இந்த உலகத்தில் அமைதி நிலவ வேண்டுமென்றால், இந்த சனாதன தர்மத்தை நாம் பராமரிக்க வேண்டும். காப்பாற்ற வேண்டும்-**லோகா சமஸ்தா சுகினோ பவந்து** என்பதக்கேற்ப. ஆதிசங்கரர் கூறினார் - **பகவத் கீதா கிஞ்சித் அதீதா.** அந்த பகவத் கீதையை நாம் கேட்போம் -

***கங்கா ஜல லவ கணிகாபீதா***
***சத்க்ருத்பி யேன முராரி சமர்ச்சா***
***க்ரியதே தஸ்ய யமேன ந சர்ச்சா***


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம்

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன் **ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து** என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

தேசத; காலத; வஸ்துத: பரிச்சேத ரஹித அத்விதீய ஆத்மானுபவ ஸித்தி; ஸம்யக் பூயாத் ॥ *43*

*தேசத்தினாலோ, காலத்தினாலோ, பொருளினாலோ கட்டுப்பாடு இல்லாத அத்விதீயமான ஆத்மானுபவ ஸித்தி எனக்கு நன்றாக உண்டாகட்டும். விளக்கம் அந்தம் என்றால் முடிவு என்று பொருள். அனந்தம் என்றால் முடிவு இல்லாதது என்று பொருள். இது மூன்று வகைப்படும். காலத்தினால், இடத்தினால், பொருளினால் என்று பெயர் பெறும். ஒரு பொருள் வீட்டின் உள்ளே இருக்க அது வெளியே இல்லை. ஓரிடத்தில் உள்ல பொருள் இன்னொரு இடத்தில் இருப்பதில்லை. இது ''இட'' வரையறை. ஆத்மா எங்குமிருப்பதால் அது இல்லாத இடமே இல்லை எனவே இடத்தினால் முடிவு இல்லை.*

*முன்பு இருந்த பொருள் இப்போது இல்லை. இப்போது இருக்கும் பொருள் நாளை இல்லை. இது காலத்தினால் வரும் வரையறை. ஆத்மா எப்போதும் இருப்பதால் 'கால' வரையறை அதற்கு இல்லை. மனிதன் மனிதந்தான் மிருகம் அல்ல. செடி, கொடி அல்ல. இது பொருள் வேறுபாடு.*

*ஆத்மா எல்லாமாகவுமிருப்பதால் பொருள் 'வரையறை' அதற்கு இல்லை.அனாத்ம வஸ்துக்கள் தேசகால வஸ்து என்னும் விஷயங்களால் குறுகுகின்றன. ஆத்மா எங்கும் இருப்பதால். அது அனந்தம் அபரிச்சின்னம்.*

பூர்வ அபர பராமர்ஸாமந்த்ரேண ஸஹஸோத்பாத்யமானஸ்ய க்ரோதாதிவ்ருத்தி விசேஷஸ்ய ஹேதோ: சித்த ஸம்ஸ்கரஸ்ய விவேக ஜன்யாயாம் க்ஷாந்த்யாதி வாஸனாயாம் த்ருடாயாம் ஸத்யாம் வினாஸாத் பாஹ்ய நிமித்த பாவேன க்ரோதாதி அனுத்பத்தி: ஸம்யக் பூயாத் ॥ 44

*மனதின் வாஸனைகளால் க்ரோதம் பொறாமை முதலிய உணர்ச்சிகள் பின் விளைவுகள் எதையும் எதிர்பார்க்காமல் ஏற்படுகின்றன. அதே சமயம் ஆத்மானுபவத்தால் அவை நசித்தும் போகின்றன. வாஸனைகளாலோ அல்லது வேறு வெளி விஷயத்தாலோ க்ரோதம் முதலியவை ஏற்படாதிருக்கட்டும்.*

**யஸ்ய ப்ரஸாதாத் அஹமேவ விஷ்ணு: மய்யஏவ ஸர்வம் பரிகல்பிதம் ச இதி**

**ஆத்ம ஸ்வரூபம் விஜானாமி, தஸ்ய பாதாரவிந்தயோ: அசன்சலா பக்தி: நிரந்தரம்**

**ஸம்யக் பூயாத் ॥ 45**

*எந்த குருவின் அருளால் நானே விஷ்ணு, என்னிடத்திலேயே எல்லாம் கல்பிக்கப்பட்டு உள்ளன என்பதைக் காட்டி அருளினாரோ அந்த குருவின் பாதாரவிந்தத்தில் அசையா பக்தி நிரந்தரம் நன்றாக இருக்க.*

**அசித்ரூபஸ்ய ஜகத; சித்ஸன்னிதேர்வித்யமானத்வாத்,சித்ரூபாத்மா ஸர்வகத இதி ஸர்வகதாத்மானுபவ ஸித்தி: ஸம்யக் பூயாத் ॥ 46**

*அசித்தான இந்த ஜகத் சிதாத்மாவினால் சித்தாக தோன்ற, சித்ரூபமான ஆத்மா எங்குமிருப்பதால் அந்த ஆத்மானுபவம் நன்றாக இருக்க.*

*(தொடரும்)*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# அன்பே உயிர் நாடி

(உத்திர ராமாயணம் மூன்றாவது அங்கத்தின் சில சிறப்பு அம்ஸங்கள்)

ஸ்ரீமதி ஹரிணி - விசாலாக்ஷி

அன்பு என்பது ஒரு அதிசயமான உணர்ச்சி ! அது மனித சமூகத்திற்கு மிகச் சிறந்த ஔஷதம். மனிதனுடைய மனப்புண்ணை ஆற்றுகின்ற அம்ருதம். மனத்துன்பங்களை நீக்கி அமைதி அளிக்கின்ற அருமருந்து. சிறந்த ரஸாயனம். "துன்ப நினைவுகளும் சோர்வும் அன்பிலழியுமடி" என்று பாடியுள்ள பாரதியாருடைய வாக்யங்கள் அமர வாக்யம். அன்புற்ளவர்களுடைய உபசாரமும் ஆறுதல் மொழிகளுமே மனித குலத்திற்கு மிக அவசியமாகும். கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற அன்பு பிரவாகத்தினுடைய குளிர்ச்சியினால், பசுமையுடன் செழிப்பாக வளருகின்ற மனப்பயிர், உள்ளத்தையும், உடலையும் போஷித்து ரக்ஷிக்கின்றது. புஷ்டியடைந்துள்ள அந்த உள்ளமே, அறிவு திறமை, கலை திறமை நிறைந்து விளங்குகின்றது. ஆனால், அந்த அன்பு வெள்ளம் எவரிடம், எப்படி, ஏன், பாய்ந்துச் செல்லுகின்றது என்பது மட்டும் அறியமுடியாத புதிராகவே இருந்து வருகின்றது.

அன்பு என்ற உணர்ச்சி, ஸத்வகுணம் நிரம்பியுள்ள உள்ளத்தில் மட்டுமே உதயமாகின்றது. அந்த உள்ளத்திலிருந்துதான் தெய்வீக மயமான சொற்கள் தோன்றுகின்றன. அன்புமயமான, கருணை மயமான இதயத்திலிருந்து பொங்கி வந்த சொற்களே ராமாயண காவ்யம், கருணாரசம் நிறைந்தது. தர்ம நீதியும், சகிப்பு குணமும் போதிக்கப்படுகின்ற ஸ்ரீ ராம காதை சமூகத்திற்கு உற்ற துணையாக, சிறந்த குருவாக, அன்பான நண்பனாக இருக்கின்றது. வால்மீகி மகரிஷி அருளிய ராமாயண காவ்யம், கருணாரசம் பிரதானமானது என்பது அறிஞர்களுடைய கருத்து. அந்த ராம சரிதத்திலே, சீதாதேவியின் சரித்திரம் சோகமயமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. நாடக பண்புக்கு தக்கபடி கதையை சிறிது மாற்றி அமைத்துள்ள பவபூதியும், கருணாரசம் பிரதானம் என்ற கொள்கையையே உறுதிபடுத்துகின்றனர். ஆனால் அவர்

நாடகத்தை சோகமான முடிவாக எழுதவில்லை.

அன்பு கணவரை பிரிந்து வனத்திலே தனியே விடப்பட்ட சீதாதேவிக்கு, உற்றத் துணையாக இருந்து, ஆறுதல் அளித்த தோழியாக தமஸாதேவி, ஒரு உன்னதமான படைப்பு! வாழ்வில் ஏமாற்றமும் அடைந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் சீதைக்கு, தைரியமளித்து, மன அமைதியை ஊட்டி, நல்ல விஷயங்களை எடுத்துரைத்து உதவி செய்தாள் தமஸா தேவி. அவளுடைய அன்பு மொழிகள் சீதாதேவியின் மனப்புண்ணை ஆற்றி தைரியமளிக்க உதவியது. வால்மீகி மகரிஷியினுடைய ஆசிரமத்திலே, அருகாமையிலே ஓடுகின்ற நதி, தமஸா நதியாகும். அதனுடைய அதிதேவதையே தமஸாதேவிதான் ! தமஸா தேவியே சீதைக்கு சிறிதளவு அமைதியளித்து வந்தது. அதனால் சீதாதேவி கணவனது பிரிவினால் ஏற்பட்ட மனத்துன்பத்தை ஓரளவு மறந்து வாழ்ந்து வந்தாள்.

பவபூதி படைத்துள்ள நாடகக் கதை ஒரு ஆச்சர்யமான கற்பனையே ! லட்சிய புருஷனாகிய ஸ்ரீ ராமர், தனது தர்மபத்னி சீதையை வனத்திற்கு அனுப்பி விடுகின்றார். அவர் உயிருக்கு நிகரான சீதையை விட்டு பிரிந்து வாழ தீர்மானிக்கின்றார். தனது கடமையிலிருந்து தவற விரும்பவில்லை. நாட்டில் இல்லற தூய்மை குறைந்து, அதர்மமும், குழப்பமும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற நினைவினாலேயே, அவர் தனது அன்பு மனைவியை, கற்பு தெய்வத்தை பிரிந்து வாழ துணிந்து விட்டார். அவளுடைய பிரிவால் அவருக்கு ஏற்பட்ட மனத்துன்பம் கொஞ்ச நஞ்ச மல்ல. நீதியையும் தர்மத்தையும் ரக்ஷிக்க வேண்டிய கடமை அரசனுடைய கடமை என நினைத்த ஸ்ரீ ராமர், மனைவியினிடத்தில் அன்பு செலுத்துவதும் கணவனுடைய கடமை என்ற நினைவையே மறந்து விட்டார்.

சீதா தேவி வனத்திலே தனியாக விடப்பட்டதும் மனம் வெதும்பி, துக்கம் தாங்காமல் கங்கையில் மூழ்கி உயிரை விட்டுவிட முயற்சி செய்கிறாள். அப்போது கர்பிணியாக இருந்த சீதைக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. அதே சமயத்தில் பூதேவியும், கங்காதேவியும் அவளை ரக்ஷிக்க நினைத்து, குழந்தைகளையும் அவளையும் ரசாதலம் அழைத்துச் சென்று, பாதுகாத்து வந்தார்கள். பிறகு குழந்தைகளுக்கு ஐந்து வயது

நிரம்பியவுடனே, குழந்தைகளையும், சீதையையும் வால்மீகி முனிவரிடம் ஒப்படைத்து விட்டு செல்கின்றார்கள். குழந்தைகள் முனிவரிடம் கல்வியும், வில்வித்தையும் கற்று கொள்கின்றார்கள். அப்போது கங்கா தேவி ஆலோசனையின்படியே சீதை கோதாவரி ஓரம் சென்று சூர்ய பூஜை செய்கின்றாள். அன்பு கணவனை ஒரு போதும் பிரியாத நிலை கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து, தவ வாழ்வை அனுஷ்டிக்கிறாள். அந்த சமயத்தில் சீதைக்கு துணையாக தமஸா தேவியும் சென்று உதவி செய்கிறாள். ஆனால் மந்திர சக்தியினால் அவ்விருவரும் பிறர் கண்களுக்குப் புலப்படவில்லை.

சீதையின் பிரிவால் மிகவும் துன்பமடைந்துள்ள ஸ்ரீ ராமர் சீதையைப் பற்றி பேசியபோது மூர்ச்சை அடைகின்றார். அதை கவனித்த சீதையின் மனம் கலங்கி தவிக்கின்றது. அப்போது தமஸா தேவி அவளை சமாதானம் செய்து, அவளை ராமருடைய அருகில் அழைத்துச் சென்று, ராமரை தொட்டு உபசரிக்கும்படி கூறினாள்.

சீதாதேவியினுடைய அன்பு ஸ்பரிசத்தினால், ராமர் ஆனந்தம் பெற்று கண்களை விழித்து, நாற்புரமும் சுற்றி பார்க்கின்றார். ஆனால் சீதை தென்படவில்லை. “ஆகவே, மறுபடியும் மூர்ச்சை அடைகின்றார். மறுபடியும் அவரை தொட்டு உபசரிக்கும்படி தமஸை சீதையிடம் கூறுகின்றாள். அவ்வாறு சீதை செய்யும் போது ராமர் சீதையினுடைய கைகளை பற்றி கொள்ளுகின்றார். ஆனால் சீதை தந்திரமாக கைகளை உதறி விடுவித்துக் கொண்டு, விலகி நிற்கின்றாள். அதை கண்டு வாசந்தி ராமரை பரிகாசம் செய்கின்றாள்.

ராமர் அஸ்வமேத யாகம் செய்யப் போவதாக அறிந்த சீதை, மனக் கலக்கமடைந்தாள். பிரிந்து வாழ்ந்த போதிலும், தனது அன்புக்கு மட்டுமே உரிய கணவன், மற்றொரு பெண்ணை விரும்புகின்றான் என்பதை அறிந்து மனம் வெதும்பினாள். தர்ம வழியிலிருந்து விலகி போகின்ற தன் கணவனை காப்பாற்ற வேணுமென்ற எண்ணத்தில் உள்ளம் துடித்தாள். அதே நேரத்தில் தனது கணவனுடைய ஒழுக்கத்தில் குறைகாண இஷ்டப்படவில்லை. தர்மத்தை மீறாத ஸ்திரீ ஹ்ருதயம் வேதனையடைந்தது.

ஒரு சமயம் ஸ்ரீ ராமர், வாசந்தியிடம் கூறின விஷயம் அவளுக்கு ஆறுதலளித்தது. சீதையின் உருவத்தை தங்கச் சிலையாக அமைத்து,

பக்கத்திலே அமர்த்திக் கொண்டு, யாகம் செய்யப் போவதாகச் சொல்லியிருந்தார். தனது பதியினுடைய தூய்மை காப்பாற்றப்பட்டது என அறிந்து, மன அமைதி பெற்றாள். ஏகபத்னி விரதத்திலே ஒன்றியுள்ள தனது பதியினுடைய அன்பு உள்ளத்தை அறிந்து பெருமிதம் கொண்டாள். பிரிவு துன்பத்தை அநுபவித்த போதிலும், கணவன் தன் மீதுள்ள அன்பை இழக்கவில்லை" என அறிந்து, மனச்சமாதானம் அடைந்தாள். அவளது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது.

பிறகு தமஸாதேவி சீதையுடன் கங்கா தேசியிடம் செல்லுகின்றாள். துன்பத்தினாலும், துயரத்தினாலும் கஷ்டப்பட்ட சமயத்திலே தமஸாதேவி, சீதையின் மனதுக்கு ஆறுதலாக பேசி தைர்யம் ஊட்டி, அவளுடைய மனக் கிலேசத்தை போக்கினாள். அதுவே உண்மையான அன்புக்கு உதாரணமாகும். தமஸையினுடைய அன்பான - மிருதுவான பேச்சு, சீதையின் மனத்துயரத்தை சிறிதளவு போக்கியது என்று கூறலாம்.

நட்பு, அன்பானவர்களின் பேச்சு, சிறந்த சஞ்ஜீவி மருந்து போன்றது! மனத்துன்பத்தினால் அல்லல்படுகின்ற உள்ளத்திற்கு அன்பான பேச்சும், உதவியும் தேவைப்படுகின்றது என்பது உண்மையே ! தமஸையின் குணங்கள் ஒரு உண்மையான தோழி எப்படி இருக்க வேண்டும், எப்படி இருப்பாள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அவளுடைய அன்பு உன்னதமானது.

### அன்பு !

அதாவது அலைகளாலும், நீர் குமிழிகளாலும் வேறு ரூபமாக மாறி மாறி தோன்றினாலும், தண்ணீர் தண்ணீராகவே இருப்பது போல, சம்பவங்களால் மாறுபட்டு காணப்பட்டாலும் எங்கும் கருணாரசம் பிரதானமாக இருக்கிறது. அதாவது எங்கும் அன்பு மயமாகவே இருக்கின்றது, என்று தமஸா தேவி கூறுகின்றாள். ஆமாம் ! ராம கதையே ஒரு அன்பு காவ்யம். அந்த உன்னதமான சிருஷ்டியில் அன்பு மட்டுமே நிறைந்துள்ளது. சீதாதேவியினுடைய தெய்வீகமான பிரேமை, ஸ்ரீ ராமபிரானுடைய இணையற்ற பிரேமை, தசரதர், கௌஸல்யா தேவி இவர்களுடைய ஒப்புயவர்வற்ற வாத்சல்யம், லக்ஷ்மணருடைய ஈடு இணையில்லாத

ஸேவா பக்தி, ஹனுமாருடைய எஜமான விஸ்வாசம், ஜடாயுவின் தியாகம், பரதாழ்வார், குகன் இவர்களுடைய சகோதர வாஞ்சை, சபரியினுடைய எல்லையற்ற நம்பிக்கை, இவ்வாறு சொல்லிக் கொண்டே போனனால், எல்லோமே அன்பினுடைய அதிசய செயல்களே என்பதை உணரலாம்.

## பவபூதி

ஆகையினாலே ஸ்ரீ ராம கதையினுடைய உயிர் நாடியே அன்புதான். அன்பு நிறைந்த உள்ளத்திலிருந்து தோன்றியதே ராம கதை. கருணாரசமே பிரதானமாகக் கொண்ட ராம கதை ஒரு அற்புதமான படைப்பு என்பதே உண்மை. நாடக திலமாகிய சாகுந்தலத்திலே, நான்காவது அங்கம் சிறப்புடன், நடுநாயக மணியாக திகழ்வது போல, உத்தரராம சரிதத்திலே மூன்றாவது அங்கம் நடுநாயகமணியாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. **உத்தரே ராமசரிதே பவபூதி: விசிஷ்யதே** என்று கூறுவது வழக்கம். பவபூதி கவிக்கு ஒரு ஏற்றத்தை அளிப்பது உத்தர ராமசரிதம். அது ஒரு அழகிய உன்னத படைப்பு ! படித்து பயன்பெற வேண்டிய மிகச்சிறந்த காவ்யம் !

---


இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய

(Reprint or Letterpress Books)

**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.

ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை

புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.

(Without Re-typeing, no proof reading)

விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**

**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**

*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

# புரட்டாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 18-10-2022 | செவ்வாய் | துலாஸ்நாநாரம்பம் |
| 21-10-2022 | வெள்ளி | ஏகாதசி, கோவத்ஸ த்வாதசி |
| 23-10-2022 | ஞாயிறு | யமதீபம், பின் இரவு நரக சதுர்தசி ஸ்நானம், ப்ரதோஷ பூஜை |
| 24-10-2022 | திங்கள் | தீபாவளி பண்டிகை, போதாயன அமாவாசை, யம தர்பணம் |
| 25-10-2022 | செவ்வாய் | அமாவாசை, லஷ்மி பூஜை, சூரிய க்ரஹணம் |
| 26-10-2022 | புதன் | கார்த்திகஸ்நாநாரம்பம், கோவர்த்தன பூஜை |
| 26-10-2022 | புதன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 27-10-2022 | வியாழன் | அனுஷம் தேர் |
| 28-10-2022 | வெள்ளி | அனுஷம் வேத பாராயணம் |
| 29-10-2022 | சனி | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர் |
| 30-10-2022 | ஞாயிறு | ஸ்கந்த ஷஷ்டி, சூரஸம்ஹாரம் |
| 31-10-2022 | திங்கள் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 02-10-2022 | புதன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 04-10-2022 | வெள்ளி | ஏகாதசி, |
| 05-10-2022 | சனி | சனி ப்ரதோஷ பூஜை, துளசி விவாஹம், ப்ருந்தாவன த்வாதசி |
| 07-10-2022 | திங்கள் | பௌர்ணமி பூஜை, அன்னாபிஷேகம் |
| 08-10-2022 | செவ்வாய் | சந்த்ர க்ரஹணம் |
| 16-10-2022 | புதன் | காவேரி முடவன் முழுக்கு, புதாஷ்டமி |
| 21-10-2022; 28-10-2022; 04-11-2022; 11-10-2022 | | வெள்ளிக்கிழமை பூஜை |

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

23.8.2022 அன்று நடைபெற்ற சைவ ஆகம சதஸ்ஸில் ஆந்திரபிரதேசத்தில் உள்ள சுமார் 400 சைவ ஆகம சிவாசார்யார்கள் பங்கேற்றார்கள். கோவில் பிரசாதங்கள் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு வழங்கப்பட்டன. மூத்த சிவாசார்யர்கள் உரையாற்றினர். புத்தகங்கள் வெளியிடப்பட்டன. சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள். எல்லா சிவாசார்யார்களுக்கும் வஸ்திரம், புத்தகங்கள், சம்பாவனை அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

01.09.22 வியாழனன்று பாரத பிரதமர் மாண்புமிகு ஸ்ரீ நரேந்திர மோதி அவர்கள் ஸ்ரீமடம் காலடி ஸ்ரீ ஆதிசங்கர கீர்த்தி ஸ்தம்ப மண்டபத்திற்கு விஜயம் செய்து பிரார்த்தனை செய்து கொண்டார்கள். காலடி கிளையின் நிர்வாகஸ்தர்கள் பிரதம மந்திரியை வரவேற்று கௌரவித்தார்கள்.

07.09.22 ''துவனி ஸ்வரம்''-ஜகத்குரு ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹ பாஷணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட பொன்மொழிகள் தெலுங்கு பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் வெளியிடப்பட்டது. முன்னதாக இந்த புஸ்தகம் கோசாலையில் பிரதக்ஷிணமாகவும் ஊர்வலமாகவும் எடுத்து வரப்பட்டது. சாகண்டி ஸ்ரீ கோடீஸ்வரராவ் இந்த புத்தகத்தைப் பற்றி முன்னுரை வழங்கினார். ஆந்திரப்பிரதேசம் உயர்நீதிமன்ற நீதியரசர் ஜஸ்டிஸ் DVSS ஸோமயாஜுலு அவர்கள் வெளியிட்டார். ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி பீடாரோஹன சதாப்தி அறக்கட்டளையின் தலைவர் வரவேற்புரை வழங்கினார்.


ஸ்ரீ சாகண்டி கோடீஸ்வரராவ் ''காமகோடி வேத ரத்னம்'' என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அது சமயம் காஞ்சியில் ஸ்ரீ மஹாஸ்வாமி அதிஷ்டானத்திற்கு கற்கள் பதித்த ஒரு அபயஹஸ்தம் சமர்ப்பிக்கப்பட்டது.


10.09.22 சனிக்கிழமையன்று சாதுர்மாஸ்ய பூர்த்தியாக விஸ்வரூப யாத்திரை நடைபெற்றது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் மாலை 5.00 மணிக்கு கோசாலையிலிருந்து புறப்பட்டு ஸ்ரீபுரம் பரிபூர்ணானந்த ஸ்வாமி ஆஸ்ரமத்திற்கு ஊர்வலமாக எழுந்தருளினார்கள். ஸ்ரீமத் பகவத்கீதையின் பதினொன்றாவது Chapter-ஸ்ரீ விஸ்வரூப அத்யாயம் பாராயணம் செய்யப்பட்டது. ஏராளமான பக்தர்கள் பங்கேற்றார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு காகினாடா வினாயகர் கோவில், ஜயேந்திர நகர் வந்தடைந்தார்கள். 11.09.22 முதல் 15.09.22 வரை ஸ்ரீ மடம் முகாம் அங்கு ஸ்ரீ மஹாதிரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை நடைபெற்றது.

16.09.22 முதல் சாமல்கோட் அருகில் பெத்தாபுரம் என்ற ஊரில் முகாம். ஸ்ரீ சாரதா நவராத்திரி பூஜை அவ்விடம் நடைபெற இருக்கிறது.

# உதயம்பாக்கம் கும்பாபிஷேகம் - 08-09-2022





*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 66வது பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் ஜன்மஸ்தலமான உதயம்பாக்கம் (செங்கல்பட்டு அருகில்) என்ற கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர ஸ்வாமி கோவில் கும்பாபிஷேகம் 08.09.22 வெள்ளியன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.*

*மிகவும் சிதிலமடைந்திருந்த இந்தக் கோவில் திருப்பணி ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் 2014ம் வருடம் ஏப்ரல் மாதம் துவங்கியது. கலவையில் முகாமிட்டிருந்த ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளால் 66வது பீடாதிபதி பிருந்தாவனத்தில் (கலவையில் உள்ளது) செங்கற்கள் வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டது. ஆச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன் அந்த செங்கற்களை வைத்து திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது.*

*23.4.2011 அன்று ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் உதயம்பாக்கம் விஜயம் செய்தார்கள். விஜயநகர சாம்ராஜ்ய அரசர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் 1529ம்*


வருஷம் இந்த கிராமத்தை காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சதாசிவ சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு சாசனம் செய்து கொடுத்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்கு பிறகு மஹா கணபதி, முருகன், சந்திரமௌளீஸ்வரர், நவக்ரஹங்கள், 66வது பீடாதிபதி, பலி பீடம் ஆகிய சந்நிதிகளில் சிறப்பான அபிஷேகங்கள் செய்யப்பட்டன. 66வது பீடாதிபதிக்கு வெள்ளிக்கவசம் அணிவிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தில் ஏராளமான ஸ்ரீமடம் பக்தர்களும் உள்ளூர்வாசிகளும் கலந்து கொண்டார்கள். எல்லோருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. எட்டு வருஷங்களாக உதயம்பாக்கத்தில் ஒரு பாடசாலை நடந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# குமர குருபரர் அருளிய சகல கலா வல்லி மாலை

ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் காசியில் ஸரஸ்வதி மீது பாடிய பாடல் இது. நவராத்ரியில் மட்டுமல்லாமல் என்றும் மாணவ மாணவிகள் கல்வியில் தேர்ச்சி பெற வழிகாட்டும். ஐயமில்லை.

**வெண்தாமரைகன்றி நின் பதம்தாங்க என் வெள்ளை உள்ளத்**
**தண்தாமரைக்குத் தகாது கொலோசகம் ஏழுமளித்து**
**உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும்வண்னம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே** 1

**பொருள் :** சகலகலா வல்லியே ! ஏழு உலகங்களையும் காத்து அதை உண்டவனான திருமால் உறங்கவும் அவைகளை அழிப்பவனான சங்கரன் பித்தனாகவும் நான்முகன் இனிதாய் சுவைக்கும் கரும்பைப் போன்றவளே வெண்தாமரைக்கு அல்லது நின் திருவடியைத் தாங்க என் அறியாமையுடைய குளிர்ந்த மனத்தாமரை தகுதி அற்றனவோ.

**நாடும் பொருள்சுவை சொல்சுவை தோய்தர நாற்கவியும்**
**பாடும் பணியில் பணித்தருள்வாய் பங்கயாசனத்தில்**
**கூடும் பசும்பொங்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்**
**காடும் சுமக்கும் கரும்பே! சகல கலா வல்லியே** 2

**பொருள் :** வெண் தாமரையில் வீற்றிருக்கும் பசுமையான பொங்கொடியே கனமான இரு கொங்கைகளையும் ஐந்து வகையாய் பின்னப்பட்ட கூந்தலை உடையவளே கரும்பே சொற்சுவை, பொருட்சுவை பொருந்த கவிகளை யாக்க பாடும் படியான பணியில் என்னை ஈடுபடுத்துவாய் சகல கலா வல்லியே.

**அளிக்கும் செழுந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன் அருள்கடலில்**
**குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ உளம்கொண்டு தெள்ளித்**
**தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு**
**களிக்கும் கலாப மயிலே சகலகலா வல்லியே** 3

**பொருள் :** புலவர்களின் கவிதை மழை பெய்யக் கண்டு மகிழும் தோகையை உடைய மயில் போன்றவளே கலை மகளே நின்னால் அருளப்பெறும் தமிழாகிய அமுதை நிறைய உண்டு நினது அருள் என்ற கடலில் குளிக்கும்படியான நிலைமை என்று எனக்கு வாய்க்குமோ !

**தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்**
**வாக்கும் பெருகப் பணித்தருள் வாய் வட நூற்கடலும்**
**தேக்கும் செந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று**
**காக்கும் கருணைக் கடலே சகல கலா வல்லியே! 4**

**பொருள் :** வடமொழி கடலும் செந்தமிழ் செல்வமும் உடைய தொண்டரின் செம்மையான நாவினின்று காக்கும் அருள் கடலே சகல கலா வல்லியே நூல்களில் அறிவும் சொல்லின் சுவை பொருந்தப்பெற்ற கவி இயற்றும் ஆற்றலும் என்னிடம் பெருகும்படி அருள்வாய்.

**பஞ்சப் பிதந்தருசெய்ய பொன்பாதபங்கேருகம் என்**
**நெஞ்சத்தடது அலராதது என்னே! நெடுந்தாள் கமலத்து**
**அஞ்சத்துவசம் உயர்ந்தோன் செ ந் நாவும் அகமும் வெள்ளைக்**
**கஞ்சத்தவிசு ஒத்திருந்தாய் சகல கலா வல்லியே 5**

**பொருள் :** நீண்ட தாளையுடைய தாமரையில் வீற்றிருக்கும் அன்னக் கொடியை உயர்த்தியவனான ப்ரம்மனின் செந்நாவிலும் உள்ளத்திலும் ஒரு சேர வீற்றிருப்பவளே கலை மகளே செம்பஞ்சு குழம்பு பூசப்பெற்ற இன்பத்தை அருளித்தருளும் சிவந்த அழகிய திருவடித் தாமரை மலர்கள் என் உள்ளமாகிய நீர் நிலையில் மலராதது ஏன்?

**பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்**
**எண்ணும்பொழுது எளிது எய்த நல்காயெழுதாமரையும்**
**விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும் அன்பர்**
**கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே! 6**

**பொருள் :** வேதங்களிலும், வான், நீர், தீ, கொடிய காற்று இவைகளிலும் அடியாரின் கண்ணிலும் கருத்திலும் நிறைந்து விளங்குபவளே சகல கலா வல்லியே இசையும் நாடகத்தமிழும் இயற்றமிழும் கல்வி அறிவும் இனிய சொற்களை உடைய கவியும் நான் எண்ணும்போது எனக்கு எளிதில் அடையும்படி அருள் செய்வாய்.

**பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்**
**கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டு தொண்டர்**
**தீட்டும் கலைத்தமிழ் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்**
**காட்டும் வெள் ஓதிமப்பேடே சகல கலா வல்லியே 7**

**பொருள் :** உள்ளம் கொண்டு தொண்டர் இயற்றும் தமிழாகிய இனிய பாடலையும் நீரையும் தெளிவாக அறியும் வண்ணம் புலப்படுத்தும் வெண் அன்னப் பெடே சகல கலா வல்லியே செய்யுளும் அதன் பொருளும் பொருளால் பெறும் பயனாகிய அறம் பொருள் இன்பம் வீடும் என்னிடம் கூட்டும் வண்ணம் நின் கடைக் கண்ணால் அருள் செய்வாய்.

**சொல்விர்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல**
**நல் வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளினாசனம் சேர்**
**செல்விக்கு அரிது என்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்**
**கல்விப் பெரிஞ்செல்வப்பெறே சகலகலா வல்லியே! 8**

**பொருள் :** வெண்மையான தாமரை மலர் இருக்கையில் வீற்றிருப்பவளே அரிது என்று ஒரு காலத்திலும் அழியாதபடி வழங்குகின்ற கல்வியாகியப் பெரும் பெறே நாவன்மையும் அவதானமும் கவிகளை இயற்றவல்ல ஆற்றலும் தந்து என்னை நின் அடிமையாகிக் கொள்வாய் சகல கலா வல்லியே!

**சொற்கும் பொருட்கும் உயிராம் மெஞானத்தின் தோற்றம் என்ன**
**நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம்தோய் புழக்கை**
**நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை**
**கற்கும் பதாம்புயத்தாயே சகா கலா வல்லியே ! 9**

**பொருள் :** தரையில் பொருந்தும் துளையுடைய துதிக்கை பொருந்திய பெண்யானையின் அரச அன்னப்பறவையும் வெட்கும் நடையை நடக்கும் திருவடியான தாமரையை உடைய அன்னையே சகல கலா வல்லியே சொல்லுக்கும் பொருளுக்கும் உயிரான மெய்ஞானத்தின் தோற்றத்தைப்போல் விளங்கும் நின்னை நினைக்கும் ஆற்றல் வாய்ந்தவர் யார்?

**மண்கண்ட வெண்குடைக் கீழாக மெற்பட்ட மன்னரும் என்**
**பண் கண்டளவில் பணிசெய்வாய் படைப்போன் முதலாம்**
**விண்கண்ட தெய்வம் பல் கோடியுண்டேனும் விளம்பில் உன் போல்**
**கண் கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே ! 10**

**பொருள் :** சகல கலா வல்லியே உலகில் உள்ள வெண் கொற்றக் குடைக்குக் கீழாக மென்மையுடைய மன்னரும் என் பனுவல் கண்ட அளவில் எனக்கு வணங்கிப் பணியும் படியாகச் செய்வாயாக.

உலகம் இயற்றும் நான்முகன் முதலிய வானில் உள்ள தெய்வம் பல கோடி இருப்பினும் உண்மையில் நின்னைப்போல் ப்ரத்யக்ஷப் பலனைத் தரும் தெய்வம் வேறு உண்டோ சகல கலா வல்லியே!

# ஸ்ரீமத் தேவி பாகவதம்

*பி. ஆர். கண்ணன்*



***4. ஈய ப்ராகாரம்:*** *இந்த இரு ப்ராகாரங்களின் மத்தியில் ஸந்தான வ்ருக்ஷவனம்; தங்கநிற புஷ்பம், அம்ருதம் போன்ற பழம். ரக்ஷகர் க்ரீஷ்மருது - சுகஸ்ரீ, சுசிஸ்ரீ (ஆனி, ஆடி மாதங்கள்) பத்னிகள்; ஸித்தர்கள் பத்னிகளுடன் இங்கு உள்ளனர்.*

***5. பித்தளை ப்ராகாரம் :*** *மத்தியில் ஹரிசந்தன வ்ருக்ஷவனம்; ரக்ஷகர் வர்ஷருது - நபஸ்ரீ (ஆவணி, புரட்டாசி மாதங்கள்) முதலான 12 பத்னிகள்; ஆயிரம் ஜலதாரைகள் இவ்விடத்தை அலங்கரிக்கின்றன.*

***6. பஞ்சலோஹ ப்ராகாரம்:*** *மத்தியில் மந்தார வ்ருக்ஷவனம்; ரக்ஷகர் சரத்ருது - இஷலக்ஷ்மி, ஊர்ஜலக்ஷ்மி (ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்) பத்னிகள்.*

***7. வெள்ளி ப்ராகாரம்:*** *மத்தியில் பாரிஜாத வ்ருக்ஷவனம்; சுகந்த புஷ்பங்கள்; ரக்ஷகர் ஹேமந்தருது - ஸஹஸ்ரீ, ஸஹஸ்யஸ்ரீ (மார்கழி, தை மாதங்கள்) பத்னிகள். கல்பவ்ருக்ஷம், ஸந்தானம், ஹரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம் இந்த ஐந்தும் தேவலோகத்தில் கல்பகம் என்ற பொதுப்பெயரில் உள்ள வ்ருக்ஷங்கள்.*

***8. தங்க (உருக்கிவார்த்த) ப்ராகாரம்:*** *மத்தியில் கதம்பவனம்; கதம்பரஸ தாரைகள்; ஆத்மானந்த அனுபவம் இங்கு கிடைக்கின்றது. ரக்ஷகர் சிசிரருது - தபஸ்ஸ்ரீ, தபஸ்யஸ்ரீ (மாசி, பங்குனி மாதங்கள்) பத்னிகள்; ஸித்தர்கள் இங்கு உள்ளனர்.*

***9. புஷ்பராக ப்ராகாரம்:*** *இங்கு மரங்கள், குளங்கள், மண்டபங்கள் எல்லாம் புஷ்பராகம் போன்றே மஞ்சள் கலந்த சிவப்பாக இருக்கின்றன. ஒவ்வொரு ப்ராகாரமும் முந்தைய ப்ராகாரத்தைப் போல லக்ஷம் பங்கு தேஜஸ் அதிகமுடையது. ஒவ்வொரு ப்ரம்மாண்டத்தினுடைய திக்பாலகர்கள் இங்கு படையுடன் இருக்கின்றனர். இந்த்ரனுடைய அமராவதியும், அக்னியின் அக்னிபுரியும், யமனின் யமபுரியும், நிர்ருதியின் ராக்ஷஸபுரியும், வருணனின் புரியும், வாயுவின் புரியும், குபேரனின் யக்ஷபுரி நவநிதிகளுடனும், ஈசானனின் புரி ருத்ரர்கள், பத்ரகாளி, வீரபத்ரர் ஸஹிதம், இவ்வாறு எல்லா திக்பாலகர்களின் புரிகளும் அந்தந்த கோணங்களில் அமைந்துள்ளன.*

***10. பத்மராகமணி ப்ராகாரம்:*** *நூற்றுக்கணக்கான பத்மராகமணி மண்டபங்கள் சிவப்பு வர்ணத்தில் ப்ரகாசிக்கின்றன. 64 கலைகள் தேவதாரூபமாக மூர்த்தீகரித்திருக்கின்றனர். இங்கு ஆயுதங்களுடன் யுத்தத்திற்குத் தயாராக ஸ்த்ரீ தேவதைகள் உள்ளனர். ஒவ்வொருவரிடமும் 100 அக்ஷௌஹிணி சேனைகள், யுத்த ஸாமக்ரி, ரதங்கள், குதிரைகள், யானைகள் உள்ளன.*

***11. கோமேதகமணி ப்ராகாரம்:*** *எல்லா மண்டபங்களும், வஸ்துக்களும் கோமேதக மணியினால் குங்குமச்சிவப்பு வர்ணத்தில் உள்ளன. இங்கு 32 சக்திகள் - வித்யா, ஹ்ரீ, புஷ்டி, ப்ரக்ஞா, ஸினீவாலி, குஹூ, ருத்ரா, வீர்யா, ப்ரபா, நந்தா, போஷிணி, ருத்திதா, சுபா, காலராத்ரி, மஹாராத்ரி, பத்ரகாளி, கபர்தினி, விக்ருதி, தண்டினியும், முண்டினியும், ஸேந்துகண்டா, ஸிகண்டினி, நிசும்பசும்பமதினி, மஹிஷாஸுரமர்தினி, இந்த்ராணி, ருத்ராணி, சங்கரார்த்தசரீரிணி, நாரி, நாராயணி, த்ரிசூலினி, பாலினி, அம்பிகா, ஹ்லாதினி -ஒவ்வொருவரிடமும் 10 அக்ஷௌஹிணி சேனைகளுடன் யுத்தத்திற்குத் தயாராக உள்ளனர்.*

***12. வஜ்ரமணி (வைர) ப்ராகாரம்:*** *இங்கு எல்லாமே வைரம். பகவதியின் பரிசாரிகைகள் - ச்ருங்காரத்தில் ஸமர்த்தர்கள் - ஒவ்வொருவரும் லக்ஷக்கணக்கான தாஸிகளால் சூழப்பட்டிருக்கின்றனர். மின்னல்கொடிபோல் சோபையுள்ள இவர்கள் எட்டு பேர் - அநங்கரூபா, அநங்கமதனா, மதனாதுரா, புவனவேகா, புவனபாலிகா, ஸர்வசிசிரா, அநங்கவதனா, அநங்கமேகலா.*

***13. வைடூர்யமணி ப்ராகாரம்:*** *இங்கு எல்லாமே வைடூர்யம். எட்டு திசைகளிலும் எட்டு மாத்ருகாதேவிகள் - ப்ராஹ்மி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி,*

*வாராஹி, இந்த்ராணி, சாமுண்டா, மஹாலக்ஷ்மி - உள்ளனர். நான்கு த்வாரங்களில் பகவதியின் வாகனங்கள், விமானங்கள், சேனாதிபதிகள் இருக்கின்றனர்.*

***14. இந்த்ரநீலமணி ப்ராகாரம்:*** *இங்கு எல்லாமே இந்த்ரநீலமணியினால் ஆனவை. நடுவில்பெரிய தாமரை, சுதர்சனசக்ரம்போல் ப்ரகாசிப்பது. 16 இதழ்களில் 16 சக்திகள் - கராலி, விகராலி, உமா, ஸரஸ்வதி, ஸ்ரீ, துர்க்கா, உஷா, லக்ஷ்மி, ஸ்ருதி, ஸ்ம்ருதி, த்ருதி, ஸ்ரத்தா, மேதா, மதி, காந்தி, ஆர்யா - உள்ளனர். அவர்களுடைய சேனாபதிகள் இருக்கின்றனர்.*

***15. முத்து ப்ராகாரம்:*** *இங்கு எல்லாமே முத்து. நடுவில் எட்டு இதழ் தாமரை. இதழ்களில் மந்த்ரிணிதேவிகள் - அநங்ககுஸுமா, அநங்ககுஸுமாதுரா, அநங்கமதனா, அநங்கமதனாதுரா, புவனபாலா, ககனவேகா, சசிரேகா, ககனரேகா - அதிசக்தி வாய்ந்தவர்கள், சிவப்பு வர்ணத்தவர்கள், ப்ரம்மாண்டங்களின் எல்லா செய்திகளையும் பகவதிக்குத் தெரியப்படுத்துகின்றனர்.*

***16. மரகதமணி ப்ராகாரம்:*** *இங்கு எல்லாமே மரகதம். நடுவில் ஆறுகோண யந்த்ரம். பூர்வகோணத்தில், ப்ரம்மா, காயத்ரியுடன், மூர்த்தீகரித்த வேதங்கள், சாஸ்த்ரங்கள், புராணங்கள் சூழ ப்ரகாசிக்கிறார். நிர்ருதிகோணத்தில் ஸாவித்ரிதேவி மஹாவிஷ்ணுவுடனும், வாயுகோணத்தில் மகாருத்ரர் ஸரஸ்வதியுடனும், அக்னிகோணத்தில் குபேரர், மஹாலக்ஷ்மி, நிதிகளுடனும், வருணகோணத்தில் மன்மதன், ரதி, மூர்த்தீகரித்த ஸ்ருங்காரங்களுடனும், ஈசானகோணத்தில் கணபதி, புஷ்டிதேவியுடனும் ப்ரகாசிக்கின்றனர்.*

***17. ப்ரவாளமணி (பவழம்) ப்ராகாரம்:*** *இங்கு பஞ்சபூதங்களின் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம்) ஸ்வாமினிகள் உள்ளனர்.*

***18. நவரத்ன ப்ராகாரம் :*** *ஸ்ரீதேவியின் அவதாரங்கள், மஹாவித்யா ஸ்வரூபங்கள், தன் சக்திகளுடன் இங்கு உள்ளனர். ஏழுகோடி மகாமந்த்ர தேவதைகளும் ப்ரகாசிக்கின்றனர்.*

*(வளரும்)*

# சாணக்ய ஸுபாஷிதம்

### அத்ருப்தி

**தனேஷு ஜீவிதவ்யேஷு ஸ்த்ரீஷு ஸாஹாரகர்மஸு**
**அத்ருப்தா:ப்ராணின:ஸர்வே யாதா யாஸ்யந்தி யாந்தி ॥ 36**

*வாழ்வதற்காகவும், பணத்திற்காகவும், பெண்ணாசைக் கொண்டும் ருசியான ஆஹரத்திற்காகவும் அத்ருப்தியாளர்கள் அவை பின் போயினர், போகிறார்கள், போவார்கள்.*

### த்ருப்தி

**ஸந்தோஷாம்ருத த்ருப்தானாம் யத் ஸுகம் சாந்திரேவ ச**
**ந ச தத் தனலுப்தானாம் இதச்சததச்ச தாவதாம் ॥**

*ஸந்தோஷம் என்னும் அமிழ்தத்தால் த்ருப்தி அடைந்தவர்களுக்கு சாந்தியே ஸுகம். அத்ருப்தியாளர்கள் தனம் வேண்டி இங்கும் அங்கும் ஓடுவார்கள்.*

### பந்தம்

**யஸ்ய ஸ்னேஹோ பயம் தஸ்ய ஸ்னேஹோ துக்கஸ்ய பாஜனம்**
**ஸ்னேஹமூலானி துக்கானீ ஸ்னேஹம் த்யக்த்வா வஸேத்ஸுகம் ॥**

*பந்தத்தினாலேயே அச்சம், பந்தமே துக்கபாத்ரம், பந்தமே துக்க மூலம் பந்தத்தை விட்டு சுகமாயிருங்கள்.*

### கேட்டல்

**ஸ்ருத்வா தர்மம் விஜானாதி ஸ்ருத்வா த்யஜதி துர்மதிம்**
**ஸ்ருத்வா ஞானமாப்னோதி ஸ்ருத்வா மோக்ஷமவாப்னுயாத் ॥**

*நல்லதை கேட்பதால் அறம் அறிகிறான். துர்மதியை விடுகிறான். கேட்பதால் ஞானம் பெறுகிறான் மோக்ஷமுமடையலாம்.*

### ப்ரஸவ வைராக்யம்

**தர்மாக்யானே ஸ்மசானே ச ரோக காலே ச யா மதி;**
**ஸா பவேத் ஸர்வதா பும்ஸ; கோன முஸ்யேத பந்தனாத் ॥**

*உபன்யாஸத்திலும், ஸ்மசானத்திலும் ரோகியாயிருக்கும் போதும் ஏற்படும் மன உறுதி மனிதர்களுக்கு எப்போதும் இருக்க. இருப்பின் தலைகளிலிருந்து விடுதலைதானே.*

*(மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் அனைவருக்கும் மன உறுதி ஏற்படும். ஆனால் அது நிலைப்பதில்லை)*

**ஆசைகள்**

**அதனா தனமிச்சந்தி வாசம் சைவ சதுஷ்பதா:**
**மானவா ஸ்வர்கமிச்சந்தி மோக்ஷமிச்சந்தி தேவதா: ॥**

*வறியவர்கள் தனம் விரும்ப விலங்குகள் பேச்சை விரும்பும். மனிதர்கள் ஸ்வர்கம் விரும்ப தேவர்கள் மோக்ஷத்தை விரும்புவர்.*

**விடுதலை**

**முக்திமிச்சஸிசேத் தாத விஷயான் விஷவத் த்யஜ**
**க்ஷமார்ஜவே தயாம் செளசம் ஸத்யம் பீயூஷவத் பிப ॥**

*விடுதலை வேண்டுமெனின் விஷயங்களை விஷமென்று ஒதுக்கு. பொறுமை, நேர்மை, தயை, தூய்மை, ஸத்யம் இவைகளை அமுதம் போல் குடி.*

**அன்பு**

**பரோபகரணம் யேஷாம் ஜாகர்தி ஹ்ருதயே ஸதாம்**
**நஸ்யந்தி விபதஸ்தேஷாம் ஸம்பத: ஸ்யு: பதே பதே ॥**

*எவர்களுடைய இதயத்தில் பரோபகாரம் ஒளிர்கிறதோ அவர்களுக்கு இடர்கள் அழியும். மேன்மை ஒவ்வோர் அடியிலும் கூடும்.*

**அறம்காத்தல்**

**அனித்யானி சரீராணி விபவோ ந ஸாஸ்வத:**
**நித்யம் ஸன்னிஹிதோ ம்ருத்யு: கர்த்தவ்யோ தர்ம ஸங்க்ரஹ: ॥**

*உடம்போ நிலையற்றவை, தனமோ நிரந்தரமில்லை. காலனோ எப்போதும் உடனிருப்பான். அறம் செய்தலே சிறந்தது.*

**கிண்டல்**

**பிதா ரத்னாகரோ யஸ்ய லக்ஷ்மீர்யஸ்ய ஸஹோதரீ**
**சங்கோ பிக்ஷாடனம் குர்யாத் நாதத்தம் உபதிஷ்டதே நச**

*தந்தையோ ரத்னங்கள் நிரம்பிய ஸமுத்ரன் லக்ஷ்மியோ உடன் பிறந்தவள். ஆனால் கடலில் பிறந்த சங்கு பிச்சையெடுக்கிறது! கொடுப்பவந்தான் பெறுவான் அல்லவா!*

ப்ரதீபப் பேழை

# சங்கர கீதை

ர. வேங்கடரத்தினம்

## சாஸ்திரமே பிரமாணம்

யோகங்களுக்கெல்லாம் நாயகனாகிய கிருஷ்ண பகவான் தம் கீதோபதேசத்தில் ’சாஸ்திரமே பிரமாணம்’ என்று திருவாய்மலர்ந்தருளுதல் ஒரு தெய்விக அழகு பொருந்திய பேச்சாகும். சாஸ்திரம் என்பது பழைய விதிமுறைகள். அநாதிகாலம் தொட்டுப் பல ஸம்ஸ்காரங்களுக்கும் வழிமுறைகள் இருந்து வந்துள்ளன. அவை அனைத்தும் சேர்ந்தே நம் சாஸ்திரங்கள் ஆகின்றன. அவற்றின் படியே காரியங்களைச் செய்ய வேண்டும் எனக் கண்ணபெருமான் கூறுதல், சாஸ்திரங்களின் தெய்விகச் சிறப்பைக் கோடியிட்டுக் காட்டுதற்கே.

சாஸ்திரத்தைப் புறக்கணித்துத் தன் இஷ்டப்படியெல்லாம் ஒழுகுபவன் எங்கும் போய்ச் சேர்வதில்லை.

य: शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारत: ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ।। (16 -23)

**ய: சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத: ।**
**ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ।।**

சாஸ்திர விதிகளை மீறி இஷ்டம்போல் நடப்பவன் கடைத்தேறுவதோ இல்லை; இன்பம் பெறுவதுமில்லை; மேற்கதியைச் சென்றடைவதுமில்லை.

இதைவிடத் தெளிவாகப் பழைய விதிமுறைகளைப் பேணி நடக்குமாறு எவருமே கூற முடியாது. எவ்விதத்திலும் மேன்மையோ, இன்பமோ தராத அசாஸ்திர வழியிலிருந்து விலகி, ஒழுங்கான பாதைக்கு வருமாறு பணிக்கும் ச்லோகம் வருமாறு-

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्त्याकार्यच्चयवस्यितौ ।
ज्ञात्वा शस्त्राविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ।।

**தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।**
**ஜ்ஞாத்வா சாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்த்துமிஹார்ஹஸி ।।**

இங்கே, பரந்தாமன் 'சாஸ்திரமே பிரமாணம்' என அறைந்து கூறுகிறார். செய்யத்தகுந்தது, தகாதது என்பதை நிர்ணயம் செய்ய, உனக்கு ஆதாரமாக, அத்தாட்சியாக இருப்பது சாஸ்திரமே. எனவே, சாஸ்திரத்தில் வகுத்துள்ளன யாவை என்று தெரிந்து கொண்டு, பின்னர் அவ்வண்ணம் செயலாற்றுவாயாக.

சங்கர பகவத்பாதர் 'வேதத்தை அறி, அதன்படி ஒழுகு' என்பதையும், உபநிஷதங்களின் உட்பொருளை உணர்; உணர்ந்து உணர்ந்த பின் நிற்க அதற்குத் தக' என மொழிவதையும் காண்கிறோம். வெறும் அறிவுக்காக அன்றி, முறையோடு செயலாற்றுவதற்காகவே ஆதி ஆசார்யர் சாஸ்திர ஞானம் பெறச் சொல்கிறார். சாஸ்திரத்தோடு மோதுதல் தகாத செயல். சாஸ்திர ஸம்மதம் என்பது சங்கரர் கையாளும் பதம். முமுக்ஷுத்வம் பற்றிய ஈரடிகள்

शास्त्रविद् गुणदोषज्ञो भोग्यमात्रे विनि: स्पृह: ।
नित्यानित्यपदार्थज्ञो मुक्तिकामो दृढव्रत: ।।

**ஸாஸ்த்ரவித் குணதோஷஜ்ஞோ போக்யமாத்ரே விநி:ஸ்ப்ருஹ: ।**
**நித்யா நித்யபதார்த்தஜ்ஞோ முக்திகாமோ த்ருடவ்ரத: ।।**

விடுதலைப் பேற்றில் நாட்டமுள்ளவனின் இயல்பு முமு க்ஷுத்வம் எனப் பேசப்படும். இங்கு, முதல்முதலில் கூறப்படுவது 'சாஸ்திரம் அறிந்தவன்' என்பதாம். விதிமுறைகளைக் கற்று, நல்லது தீயது பாகுபாடு புரிந்துகொண்டு, இன்ப வேட்கையில் ஈடுபாடு இல்லாமல், அழிவுள்ள - அழிவில்லாத பொருள்கள் எவை எவை என்று தேர்ந்து, முக்தி பெறுதலில் உறுதிப்பாட்டுடன் நாடி நிற்றல் முமுக்ஷுக்களின் தன்மையாம். (ஸர்வவேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்க்ரஹம்.)

முதற் படியே சாஸ்திரஞானம்தான். 'சாஸ்திரம் சொல்லுகிறபடியே செல்' என்கிறது, சாஸ்திரங்கள் அனைத்திலும் சிறந்ததாகிய கீதாசாஸ்திரம். இதையே ஆசார்ய புருஷரும் உபதேசிக்கிறார்.

## தனிமையை நாடு

யோகி தன்னந்தனியனாக இருந்து ஸாதகம் செய்கிறான். உள்ளத்தை அடக்குதல், உடைமைகளைத் துறத்தல் முதலியன எல்லாம் பின்னர் வருவன. வெளியே தெரியாத வண்ணம், தனித்திருந்து யோகத்தில் ஆழ்ந்திருக்க வேண்டும் என்பது கீதோபதேசம்.

योगी युञ्जीत सततमात्मानं रहसि स्थितः ।

एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः ।। (610)

**யோகீ யுஞ்ஜீந ஸததமாத்மா நம் ரஹஸி ஸ்திதः ।**

**ஏகாகீ யதசித்தாத்மா நிராஸி அபரிக்ரஹः ।।**

இங்கே பகவான் 'ரஹஸி' என்று கூறுகிறார்; மீட்டும் 'ஏகாகீ' என்றும் சொல்லுகிறார். தன்னந்தனியனாக ஒதுங்கிப்போய், யோகம் செய்கிறான் என்பது வெளியே எவர்க்கும் தெரியக்கூடாது என்பது போல் உள்ளது கண்ணன் கட்டளை. இரகசியமாகக் காரியம் நடைபெற வேண்டும்.

மீட்டும். பதின்மூன்றாம் அத்தியாயத்தில் பத்தாம் ச்லோகம், ஞானத்தின் லட்சணங்களைப் பட்டியல் ஆக்கித் தருகையில், தனியான இடத்தைத் தேடிச் செல்லல், மக்கள் கூட்டத்தில் ஈடுபாடில்லாமை இவை இரண்டையும் சொல்லும்.

विविक्तदेशसेवित्वसरतिर्जनसंसदि ।

**விவிக்ததோஸேவித்வமரதிர் ஜநஸம்ஸதி ।**

இந்த இரண்டு இயல்புகளும் ஞானியர்க்கு வந்தமைபவை என்று கிருஷ்ண பகவான் மொழிகிறார்.

एकान्ते सुखमास्यतां - ஏகாந்தே ஸுகமாஸ்யதாம். இது ஸோபான பஞ்சகத்தின் கடைசிச் செய்யுளின் முதலில் வரும் ஆணை.

தனிமையில் இன்பம் காண்பாயாக; தனித்தமர்ந்து சுகமாக இரு' என்று இங்கே கூறும் பகவத்பாதர், தந்யாஷ்டகம் மூன்றாம் சலோகத்திலும் இதையே கூறுவார்:-

धन्याश्चरन्ति विजनेषु विरक्तसङ्गा : ।।

**தந்யாஸ் சரந்தி விஜநேஷ விரக்தஸங்கா: ।।**

இந்த வாக்கியம், 'கூட்டுச் சேராமல் ஆள் சந்தடியற்ற இடங்களில் நடமாடுவோர் பாக்கியசாலிகள்' என்கிறது. இங்கும் விஜந, விரக்தஸங்க என்னும் இரண்டு சொற்கள் வந்து தனிமையைத் தெளிவாக்குகின்றன.

## தனிமையை நாடுவது எதற்காக?

ஐந்தாம் ச்லோகத்தின் கடைசி அடியில், ஆதி ஆசாரியர் காரணம் தருகிறார். தனிமையில்தான் ஆதியந்தமில்லாத அவ்வரும் பெருஞ்சோதியைக் காணுதற் கூடுமாம்.

ज्योति: परात्परतरं परमात्मसंज्ञं धन्या द्विजा रहसि हृद्यवलोकयन्ति : ।।

**ஜ்யோதி: பராத் பரதரம் பரமாத்மஸம்ஜ்ஞம் ।**

**தத்யா த்விஜா ரஹஸி ஹ்ருத்யவலோகயந்தி ।।**

தனிமையில் தரிசனம் தருவார் இறைவன்; இதய வெளியில் கண்டு ஆனந்திப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

## இறையருளுக்கு இணை இல்லை

அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை என்பது ஆஸ்திக உலகில் ஸவத: ஸித்தம்; அனைவரும் ஏற்கும், ருசு வேண்டாத அடிப்படை உண்மை.

இறைவனின் திருவருள் இருந்தால்தான் நாம் இறைவனை காண முடியும். பக்தி செய்தும், பகவானைப் பார்த்தே தீரவேண்டும் என்று நியதி ஏதும் இல்லை. அதற்கு இறைவனின் திருவருள் கூடி வரவேண்டும். இதைக் கண்ணபிரானே மொழிந்தருள்வார். பதினோராம் அத்தியாயம் விஸ்வரூபதர்சன யோகம் எனப்படும். தம் பேருருக் காட்டிவிட்டுக் கண்ணபிரான் கூறும் வார்த்தைகள் இங்கே கவனித்தற்குரியன.

मया प्रसन्नेन तवार्जुनेदं रूपं परं दर्शितमात्मयोगात् ।।
तेजोमयं विश्रमनन्तमाद्यं यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम् ।।

**மயா ப்ரஸத்தேந தவார்ஜுநேதம்**
**ரூபம் பரம் தச்சிதமாத்மயோகாத் ।**
**தேஜோமயம் விஸ்வமந்தமாத்யம்**
**யந் மே த்வதந்யேத த க்ருஷ்டபூர்வம் ।।**

இங்கே, பகவான் பார்த்தனுக்குச் சற்று முன்பு அவன் கண்ட திருக்காட்சி எத்தகையது என்பதைக் கூறுகிறார். தம் திருவருள் சுரந்து, அவனுக்கு எவருமே முன்பு கண்டிராத ஒளிமிக்க, முடிவிலாத, முழுமுதலாகிய விசுவரூபக் காட்சியை அளித்து அருளியதாகப் பரந்தாமன் பகர்கிறார்.

வேதம் ஓதியோ, வேள்விகள் நடத்தியோ, அறங்கள் புரிந்தோ அல்லது வேறு கடுமையான தவச் செயல்களினாலேயோ எவரும் இலேசில் கண்டுவிடக் கூடிய காட்சி அல்ல விசுவரூப தரிசனம் என்பது! காணுதற்கரிய அவ்வினிய காட்சியைக் காண அமரர்கள் நாளும் துடித்துக் கொண்டிருப்பதாகக் கண்ணன் கூறுகிறார் (11-48, 52, 53).

இதன் பொருள், இறையருள் இருந்தால்தான் இறைவனை அடையலாம்' என்பதாகும். இதே கருத்தைத்தான் சங்கரரும் கூறுவார். மரத்தடி வாழ்வையும் கட்டாந்தரைப் படுக்கையையும் கங்கா ஸாகர தீர்த்த யாத்திரையையும், பிட்சையெடுத்து உண்பதையும் எள்ளும் ஆசாரியர், உண்மையில் குறிப்பிடுவது-'இறையருள் இல்லையேல் இவற்றுள் எதற்குமே பயன் இல்லை' என்பதாகும். அதனால்தான் 'பஜ கோவிந்தம்' எனவும், 'பஜே பாண்டுரங்கம்' எனறும் நமக்கு எடுத்துக் கொடுக்கிறார் நல்ல நல்ல நாமாவளிகளை.

**உண்மை உறவு எது?**

மண்ணியல் உறவுகளை என்றுமே ஞானியர் உதறியவர்களாகவே இருப்பர். 'பெண்டும் பிள்ளையும் யாவர் என்று சிந்தித்துப் பார்த்தாயா? உன் மனைவி யார்? உன் புதல்வன் தான் யார்? இந்த உலகே விந்தையானது. நீயாரைச் சேர்ந்தவன்; யாருக்கு உரியவன்?' இவ் வண்ணம் வினாவுக்கு மேல் வினாவாகத் தொடுக்கும் பஜ கோவிந்த ச்லோகம் ஒன்று உண்டு.

'தம்பீ, நீ எங்கிருந்து இங்கு வந்து சேர்ந்தாய்? இதுபற்றி எல்லாம் தீர எப்போதேனும் சிந்தித்திருக்கிறாயா?

का ते कान्ता कस्ते पुत्र: संसारोऽयमतीव विचित्र: ।
कस्य त्वं क: कुत आयातस्तत्त्वं चिन्तय तदिदं भ्रान्त: ।।

**கா தே காந்தா கஸ் தே புத்ர: ஸம்ஸாரோயம் அதீவ விசித்ர: ।**
**கஸ்ய த்வம் க: குத ஆயாதஸ் தத்த்வம் சிந்தய ததிதம் ப்ராந்த: ।। (பஜ-3)**

ஆசாரியர் 'தம்பீ!' என்று அழைத்து இவ்வளவும் கேட்கிறார். நம் மனைவி மக்களை மட்டும் பகவத்பாதர் வந்தைத் தொந்தங்கள் என்று கூறுவதாக எண்ண வேண்டாம். பெற்ற தாய் தந்தையரையும் அவர் விட்டுவிடவில்லை.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

புலவர் மா. வெங்கடேசன்



ஸ்ரீ மடத்தின் சார்பில் இந்து தமிழ் கவிஞர் மன்றம் என்னும் அமைப்பு நடந்து வந்தது. 1976 -ல் 1987 வரை பத்தாண்டுகள் அதன் தலைவராய் இருந்து நடத்தி வந்தேன். பத்தாண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட கவிதைப் போட்டிக்கு ஏற்பாடு செய்து உயர்ந்த பரிசாக ஒரு தங்கக் காசு அளிக்கலாமென்று எண்ணினேன். இது பற்றி வெளி மாநிலத்தில் யாத்திரை செய்து கொண்டிருந்த புதுப் பெரியவாளிடம் தெரிவித்தேன். ஸ்ரீ மடம் மேனஜரிடமிருந்து தங்கக் காசு பெற்றுக் கொள்ளுமாறும் மற்றவைகளை மகா பெரியவாளிடம் தெரிவிக்கவும் என்று புதுப்பெரியவா உத்தரவிட்டார்கள். அவர் கூறிய படியே சிறப்புப் பரிசு பற்றிய அறிவிப்பை பத்ரிகைகளுக்கு அனுப்பும் முன் மகா பெரியவாளிடம் அவருடைய அனுக்ரகத்திற்காக விண்ணப்பித்தேன். அச்செய்தியை பார்த்தபின் ‘கவி பாடுபவர்களுக்கு இன்னும் விசேஷமா பரிசு தரணும் அதனால ரத்னம் பதிச்ச இன்னொரு காசு தரப்படும்’ என்று எழுதி அனுப்பு என்றார்கள். அதைக் கேட்டதும் தமிழ் மீதும், தமிழ் புலவர்கள் மீதும் ஸ்ரீ பெரிய வாளுக்கு இருந்த மதிப்பை எண்ணி வியந்தேன்.

அவர் கூறிய படியே செய்தேன். ஏராளமான கவிஞர்கள் கலந்து கொண்டனர். பரிசளிப்பு விழா ஆண்டுவிழா நிகழ்ச்சிகளோடு சேர்க்கப்பட்டது. பத்தாம் ஆண்டு விழா ஸ்ரீமடத்தில் நடக்க ஏற்பாடாயிருந்தது. பெரியவாளைத் தர்சித்து ஆசி வாங்கியபின் பாலபெரியவாளிடமிருந்து பரிசை வாங்க ஏற்பாடு செய்திருந்தோம். நிகழ்ச்சி நிரல் பெரியவாளின் பார்வைக்குப் போயிற்று. அதைப் பார்த்துவிட்டு 'தொண்டைமண்டல ஆதீன ஸன்னிதானத்தை அழைக்கவில்லையா என்று வினவினார். வேறு ஒரு நிகழ்ச்சிக்கு அழைக்கலாம்' என்று தீர்மானம் என சொன்னேன். அவரும் வரட்டும் கேட்டுப்பார், அவர் பெயரையும் சேர்த்துவிடு' என்றார் பெரியவர். உத்தரவு என்று கூறி சன்னிதானத்தையும் அழைத்தோம். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள்.

அந்த இனிய நாளில் கவிஞர்கள் எல்லோரும் மலர்க்கிரீடம் மாலை இவைகளை ஸமர்ப்பித்து பெரியவா இவைகளை அணிந்து காட்சி தர கேட்டனர். புன்முறுவல் பூத்து அவைகளைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தார். பின்பு ஒவ்வொரு புலவரையும் அழைத்து குசலம், ஊர், மக்கள் நிலவரம் இவைகளைக் கேட்டு ஆசீர்வாதம் செய்தார். ஒரு புலவர் மனல்மேல்குடி என்றதும் 'குலச்சிறை நாயனார் அவதாரஸ்தலமா' அவருக்குப் பூஜை நடக்கிறதா?' என்று வினவினார். ஆண்டு தோறும் நடப்பதாகவும் அதற்கு கமிட்டி இருக்கு என்று அவர் சொல்ல பெரியவா மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பின்பு எல்லோரையும் அங்கேயே உட்காரச் சொல்லி ஒரு குட்டி உரை நிகழ்த்தினார்கள்.

'' புலவர்களாகிய நீங்கள் எல்லாம் நம் பழைய சமயாசாரங்களைக் கடைபிடிக்க வேண்டும் உறுதியுடன் இருக்க வேண்டும். மேல் நாட்டவர்கள் நம் ஆசார அனுஷ்டானங்களை ஓசத்தியா நினைக்கிறார்கள், நாம் அவர்களது நாகரிகம் ஓசத்தி என்று நினைக்கிறோம். அவர்களைப் போலவே நடை உடை பாவனை எல்லாம் மாற்றிக் கொள்கிறோம். அதனால் நம் சமயத்தைச் சார்ந்தவர்கள் நம்ம சமயாசார்னங்களைத்தான் அனுஷ்டிக்கணும் என்று இன்னிக்கி உங்க மா நாட்டில் தீர்மானம் போடுங்கள் அதன்படி நீங்களும் நடக்க உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்''.

இப்படி ஒரு இனிய உபதேசத்தை செய்து அனைவருக்கும் பழப் ப்ரசாதம் தந்து அனுக்ரஹம் செய்தார்கள். புலவர்கள் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சி. அனைவரும் மகாபெரியவரின் இவ்வனுக்ரகத்தை தங்கள் வாழ் நாளில் கிடைத்தற்கரிய வரப் ப்ரஸாதமாகக் கூறி மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

### ஆண் கடத்தல்-- அசரீரி வாக்கு

இதுவென்ன? ஆண் கடத்தல்? அசரீரி என்ன செய்தது? என்று சிஷ்யன் கேட்க பௌராணிகர் சிரித்துக் கொண்டே கூறலானார். நிறைய பெண் கடத்தல் கேட்டிருக்கிறோம். இப்பவும் கேட்கிறோம். பணத்துக்காக ஆண் கடத்தல் இப்போது நடக்கிறது.

அக்காலத்தில் நடந்த ஓர் ஆண் கடத்தல் பற்றிய கதை. அதுவும் ஓர் அசரீரியினால் வந்த விளைவு. கம்சனுக்கு அசரீரி ஒன்று எமனாய் வந்தது. க்ருஷ்ண ஜனனம் வந்தது. இந்த அசரீரி செய்ததைப் பார்ப்போம். இதுவும் க்ருஷ்ண சம்பந்தம் தான் என்று கதையை ஆரம்பித்தார்.

சம்பாசுரன் மகா துஷ்டன். இறுமாப்புடன் இருந்தவன். அவன் மனைவி மாயாவதி. சம்பாசுரனுக்கு க்ருஷ்ண ருக்மணியின் பிள்ளையினால் மரணம் ஏற்படும் என்று ஓர் அசரீரி கூற வந்தது வினை. கர்பவதியான ருக்மணி பிள்ளை பெற்ற ஆறாம் நாள் தந்த்ரமாக சம்பாசுரன் அந்த குழவியை கடத்தி அது அழியட்டும் என்று கடலில் வீசினான்.

இனி தன்னைக் கொல்ல க்ருஷ்ணனின் புத்ரன் இல்லை என்கிற இறுமாப்புடன் இருந்தான். அவனது போறாத வேளை அக்குழவியை ஒரு சுராமீன் விழுங்க அது பெரிய மீன் என்பதால் அதை செம்படவன் மாயாவதி ராணிக்கு சமர்ப்பித்தான்.

அவள் அந்த சுராமீனை வெட்ட அதனுள் ஒரு அழகிய குழந்தை இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள். அந்த சமயம் நாரதர் அங்கு வர அவளிடம் ‘‘இது க்ருஷ்ணனின் குழந்தை. இது வேறு யாருமில்லை உன் கணவன் காமனே. நீயும் ரதிதான். விரைவில் இருவரும் சேர்வீர்கள் என்று கூறினார்.

(முன் காலத்தில் பரம சிவனால் காமதஹனம் ஆனபின் ரதி மாயத்தால் மாயவதியானாள். தன் கணவன் மன்மதனுக்காக காத்திருந்தாள். க்ருஷ்ணரே புத்ரப்ராப்த்திக்காக சிவனை

நாட அவரும் மன்மதனே அவருக்குப் புத்ரனாக பிறப்பான் என்று அருளினார். பார்வதி தேவியும் ரதியிடம் மாயாவதியாய் பிறந்து அவனுக்காகக் காத்திருந்து மணம் முடிக்க அருளினாள். இது எதுவும் சம்பாசுரனுக்குத் தெரியாது. )

க்ருஷ்ணனின் புத்ரன் ப்ரத்யும்னன் மாயாவதியால் சம்பாசுரனுக்குத் தெரியாமல் வளர்க்கப்பட்டான். அவள் அவனுக்கு மாயவித்யைகளைக் கற்பித்தாள். மாயப் போர் செய்வது பற்றியும் கற்பித்தாள். அவன் யுவன் ஆனான். காதல் வயப்பட்ட அவள் அவனிடம் இயற்கைக்கு மாறாக நடக்க ஆரம்பித்தாள். இது கண்ட ப்ரத்யும்னன் அவளிடம் நீங்கள் எனக்குத்தாய். ஏன் இந்த விபரீதம்? என்று கேட்க அவளும் பூர்வகதையைச் சொல்லி சம்பாசுரனின் மரணம் அவன் கையில் தான் உள்ளது என்றும் கூறினாள்.

சிற்சில சம்பவங்களால் ஐயம் உண்டான சம்பராசுரன் தன் வீட்டிலேயே தன் எதிரி வளர்வதைக் கண்டு கொதித்தெழுந்தான். அவனுடன் போரிட யத்தனிக்க அதை முறியடித்தான் ப்ரத்யும்னன். தன் மாயா யுத்ததை பலமுடன் அசுரன் காண்பிக்க அது முழுவதையும் முறியடித்து அவனை மாய்த்தான் ப்ரத்யும்னன். மாயாவதியும் ப்ரத்யும்னனும் த்வாரகைக்குச் சென்றனர். அவர்களைப் பார்த்த ருக்மணி தன் புத்ரன் உயிருடன் இருந்திருந்தால் ப்ரத்யும்னன் போல் இருப்பான் என்று ஏக்கத்துடன் சொல்ல அப்போது அங்கு வந்த நாரதர் ப்ரத்யும்னனே அவளுடைய புத்ரன், அவனே பூர்வ ஜன்மத்தில் மன்மதன், சிவனுடைய அருளால் ப்ரத்யும்னனாக பிறந்தவன், மாயாவதி பூர்வ ஜன்மத்தில் ரதி என்று விளக்கி அவளுடைய ஏக்கத்தை போக்கினார். அவர்களிருவருக்கும் விவாஹம் நடைபெற்றது.

அசரீரி வாக்கும் பலித்தது, என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

(விஷ்ணு புராணம்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



உடலெங்கும் அம்புகளால் துளைக்கப்பட்டு கீழே விழுந்த பீஷ்மரைக் கண்ட போர் வீரர்கள் அதிர்ச்சியுற்றனர். மனம் தளர்ந்து நின்றனர். பூமியின் மேல் அம்புப் பேழையில் படுத்திருந்தார் அவர். பாணங்கலைத் தொட்டுத் தொட்டு இவை அர்ஜுனனின் பாணங்கள், சிகண்டியினது அல்ல என்று கூறிக் கொண்டிருந்தார்.

தெய்வ ஒளி அவரைச் சூழ்ந்தது. பூமியில் படுத்திருக்கும் அவரைக் காண ப்ரம்மாவை தேவர்கள் பார்க்க வருவது போல் ஆயிரக்கணக்கான பேர் ஓடி வந்தனர். அங்கு வந்த கௌரவர்களிடமும் பாண்டவர்களிடமும் 'என் தலை தொங்குகிறது. ஒரு தலை அணை தாருங்கள்' என்று கூற பட்டுத் தலயணைகள் பலவற்றை பலர் கொணர்ந்தனர். அவைகளை நிராகரித்து அர்ஜுனனிடம்' அர்ஜுனா நீ எனக்கு உகந்த தலையணையைக் கொடு'' என்றார். உடனே மூன்று அம்புகளால் அவர் தலையைத் தாங்க வைத்தான் அர்ஜுனன்.' அர்ஜுனன் சரியாகச் செய்தான். நான் உத்தாரணம் வரையில் உயிருடனிருப்பேன். யார் உயிருடன் இருப்பீர்களோ என்னை வந்து பாருங்கள்' என்று பீஷ்மர் கூறினார்.

'அர்ஜுனா என் உடம்பு எரிகிறது நீர் கொடு' என்று பீஷ்மர் கேட்க உடனே அர்ஜுனன் மந்த்ரம் சொல்லி பாணத்தை பூமியில் விட கோஷத்துடன் விமலமான ஜலம் மேலே வந்தது. அவரது தாகத்தைத் தணித்தது. மிகவும் மகிழ்ந்த பீஷ்மர் துர்யோதனிடம் 'பார்த்தாயா இது போல் கார்யத்தை அர்ஜுனனைத் தவிர யார் செய்வார்?

தாமதிக்காதே. அமானுஷ்யமான கார்யங்களைச் செய்ய சிலரால்தான் முடியும். பாண்டவர்களுடன் சமாதானமாகப் போ.' என்றார்.

துர்யோதனன் இறக்கும் தருவாயில் உள்ள மனிதன் எப்படி மருந்தை ஏற்பதிலையோ அப்படி அவரது உபதேசத்தை ஏற்கவில்லை.

பின்பு எல்லா அரசர்கள், மந்த்ரிகள் தத்தம் பாசரைக்குத் திரும்பினர். பீஷ்ம பிதாமஹர் வீழ்ந்தார் என்பதைக் கேட்ட கர்ணன் பயத்துடன் அவரது இருப்பிடம் சென்று அவர் காலில் விழுந்தான்.

## பீஷ்மர் - கர்ணன் ஸம்வாதம்

கர்ணன், குருஸ்ரேஷ்டரே உங்களால் வெறுக்கப்படும் ராதேயன் வந்துள்ளேன். அவனை ஒரு கரத்தால் தடவி பேசலுற்றார். பீஷ்மர் குந்தியின் புத்ரன் நீ ராதாவின் புத்ரன் அல்ல. நாரத மகரிஷி கூறி கேட்டுள்ளேன். காரணமில்லாமல் பாண்டவர்களை வெறுக்கிறாய். அதனாலேயே அவையில் பல முறை என் கோபத்திற்கு ஆளானாய். உன்னுடைய வீரத்தை நான் அறிவேன். க்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் சமானமானவன் நீ. பாண்டவர்களுடன் சேர். போரில் வெற்றி பெறு. சூர்ய புத்ரனே உன்னுடைய வைரியம் என்னுடன் போகட்டும்.

கர்ணன் : பிதாமஹரே நான் குந்தியின் புத்ரன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என் மானம் காத்த என்னை ஆதரித்த, ஆதரிக்கும் துர்யோதனனுக்குத் த்ரோகம் செய்ய மாட்டேன். அவனுக்கு நன்றிக் கடன் பெற்றுள்ளேன். நான் உங்களுக்குச் செய்த வசவுகளை பொறுத்து மன்னிக்க வேண்டுகிறேன்.

பீஷ்மர் : ஸ்வர்கத்தைப் பெற யுத்தம் செய் . நான் ஆசீர்வதிக்கிறேன். சமாதனத்திற் காக நான் செய்தனைத்தும் வீணானது. அறம் எங்கோ ஜயம் அங்கே சென்று வா.

பீஷ்மரின் உரையைக் கேட்ட கர்ணன் அவரை வணங்கி துர்யோதனன் இருக்குமிடம் சென்றான்.

பீஷ்ம பர்வம் முற்றியது

(தொடரும்)

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




276. **கேள்வி** : அனாத்ய ப்ராசனம் விளக்கம்

**பதில்** : புஜிக்கக் கூடாத வஸ்துக்களைப் புஜிப்பது.

277. **கேள்வி** : யவ மத்யம் விளக்கம்

**பதில்** : சுக்லபக்ஷ ப்ரதமையிலிருந்து பௌர்ணமி நடுவில் வந்து க்ருஷ்ண பக்ஷ ப்ரதமை வரை இருப்பது.

278. **கேள்வி** : பிபீலிகா மத்யம் விளக்கம்

**பதில்** : க்ருஷ்ணபக்ஷ ப்ரதமையில் தொடங்கி அம்மாவாசை நடுவில் வர சுக்லபக்ஷ ப்ரதமை வரை இருப்பது.

279. **கேள்வி** : சாந்த்ராயனம் எத்தனை வகை?

**பதில்** : 1 ரிஷி, 2 சிசு, 3 யதி என மூன்று வகை.

280. **இவைகளின் விவரணம் கூறுக.**

ஒரு மாதம் முழுவதும் தினம் மூன்று கவளங்கள் மட்டும் நியமத்துடன் ஹவிஸ் அன்னத்தை உண்பது ரிஷி சாந்த்ராயனம்.

பகலில் நாலு கவளங்கள், இரவில் நாலு கவளங்கள் மட்டும் உண்பது சிசு சாந்த்ராயணம்.

ஒரு மாதம் முழுவதும் பகலில் எட்டு கவளங்கள் உண்பது யதி சாந்த்ராயணம்.

281. **கேள்வி** : அக்னி ஆதானம் என்றால் என்ன?

**பதில்** : அக்னி ஹோத்ரம், யாகம் இவைகளைச் செய்வதற்கு முன் செய்யப்படும் கர்மாவிற்கு அக்னி ஆதானம் என்று பெயர்.

282. **கேள்வி** : ப்ரம்மௌதனம் என்பது என்ன?

**பதில்** : அக்னி ஆதானத்திற்கு முன் தினம் ஒரு சாதம் தயாரிக்கப்படும். இதனைக் கொண்டு ப்ரம்ம தேவரைக் குறித்து ஹோமம் செய்யப்படும். இந்த சாதம் அந்த ஹோமத்தில் பயன்படுத்தப்படும். இந்த யாகத்தை நடத்தி வைக்கும் ப்ராம்மணனே அத்வர்யுகளுக்கு அளிப்பார். அதை ப்ராம்மணர்கள் உண்பதாலும் ப்ரம்மௌதனம் என்று பெயர்.

283. **கேள்வி : நாந்தீ ஸ்ராத்தம் என்பது என்ன ?**

**பதில் :** வீட்டில் நடக்கும் எல்லா சுபகார்யங்களின் சமயத்தில் பித்ருக்கள் குறித்து செய்யப்படும் சடங்கு.

284 **கேள்வி** : இது எத்தனை வகை ?

**பதில் :** 1. பார்வணமாக ஸ்ராத்தம் செய்வது போல் செய்வது 2. ஹிரண்ய ரூபமாகச் செய்வது.

285 **கேள்வி** : நாதமுனி என்பவர் யார்?

**பதில்** : நம்மாழ்வாருக்குப் பிறகு மறைந்து போயிருந்த திவ்யப் ப்ரபந்தங்களை உலகிற்கு அளித்த உத்தமர்.

286. **கேள்வி** : தான் விரும்பும் போது மரணம் அடையலாம் என்னும் வரத்தைப் பெற்றவர் யார்?

**பதில்** : பீஷ்ம பிதாமஹர். ஹனுமான்.

287 **கேள்வி** : இதை இவர்களுக்கு அளித்தவர்கள் யார் ?

**பதில்** : ஹனுமானுக்கு இந்த்ரனும் பீஷ்மருக்கு அவர் தந்தை ஸந்தனுவும் அளித்தனர்.